# ප්‍රවාහන අමාත්‍යාංශය
# போக்குவரத்து அமைச்சு
# Ministry of Transport



ගරු ප්‍රවාහන අමාත්‍යතුමා

கௌரவ போக்குவரத்து அமைச்சர்

Hon. Minister of Transport



ගරු ප්‍රවාහන නියෝජ්‍ය අමාත්‍යතුමා

கௌரவ போக்குவரத்து பிரதி அமைச்சர்

Hon Deputy Minister of Transport



ප්‍රවාහන අමාත්‍යාංශ ලේකම්තුමා

போக்குவரத்து அமைச்சின் செயலாளர்

Secretary to the Ministry of Transport

# போக்குவரத்து அமைச்சு

# 2013 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை

இலக்கம் : 01

டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு – 10.

2014 மார்ச்

## நோக்கம்

எமது பிராந்தியத்திலேயே மிகவும் வசதியான புகையிரத மற்றும் பஸ் சேவையினை வழங்கும் நாடாக இலங்கையை திகழச் செய்வதே எமது இலட்சியம்.

## நோக்கு

மனித வளங்கள் எல்லாவற்றையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் தொடர்ச்சியாக மேம்படுத்திப் பேணும் விதத்தில் தொழிநுட்பவியல் ஆற்றல்களைப் பிரயோகித்து இலங்கையர்களால் நாள்தோறும் உபயோகிக்கப்படும் போக்குவரத்துச் சேவையை உயர்மட்ட வசதி கொண்டதும் சௌகரியமானதுமாக மாற்றியமைத்து நாட்டினுள் வாழ்க்கையை மேம்படுத்துவதே “மஹிந்த சிந்தனையின்” ஆதாரமாகக் கொண்ட எமது அவாவாகும்.

## உள்ளடக்கம்

### 1 ஆவது பிரிவு


**1. அறிமுகம் ........ 1**

**2. நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் ........ 1**

2.1. 2013 ஆம் ஆண்டினுள் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் ...... 1

2.1.1. அமைச்சரவை விஞ்ஞாபனமும் மற்றும் அவதானிப்புக்களை முன்வைத்தலும். ........ 1

2.1.2 காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிற பணிகள். ........ 2

2.2 2013 ஆம் ஆண்டினுள் புகையிரத தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள். ........ 3

2.3 சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் ........ 4

2.4. மனித வள அபிவிருத்தி தொடர்பாக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள். ........ 4

2.5 நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய விடயங்கள். ........ 5

**3. நிதி சார் முகாமை மற்றும் முன்னேற்றம் ........ 8**

3.1 கொ கொ ன கொளயள்ளகொள்முதற் குழு ........ 8

3.2 நிதி சார் முகாமை ........ 9

**4. 2013 ஆம் ஆண்டினுள் திட்டமிடற் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் ........ 14**

**5. 2013 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டுள்ள புலனாய்வுக் கடமை தொடர்பான விபரப் பொழிப்பு ........ 17**

**6. புதிய புகையிரத வீதிகள் அபிவிருத்திப் பிரிவு ........ 17**

6.1 மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி ........ 18

6.2 களனி கங்கை புகையிரத மார்க்கத்தினை அவிசாவளையிலிருந்து கம்பாந்தோட்டை வரை நீடிப்புச் செய்தல். ........ 20

6.3 குருனாகல் - கபரணை புதிய புகையிரத வீதி. ........ 20

6.4 கொறணை - கொட்டாவ புதிய புகையிரத வீதி. ........ 20

6.5 மதவாச்சி - திருகோணமலை புதிய புகையிரத வீதி ........ 21

6.6 வெல்லவாய - பதுளை புதிய புகையிரத வீதி ........ 21

6.7 திருகோணமலை - புத்தளம் புதிய புகையிரத வீதி ........ 21

**7. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை. ... 21**

7.1. அறிமுகம் ... 21

7.2. இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்களுக்கான நபர்களுக்கான இழப்பீட்டு பிரேரணை முறைமை... 22

7.3 வீதிப் பாதுகாப்புக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் ... 23

7.4 வீதிப் பாதுகாப்பு ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான சட்ட வரைவு ... 23

## II ஆவது பிரிவு

**1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்......27**

1.1 அறிமுகம் ...... 27

1.2 செயலியக்கக் காட்டி ...... 29

1.3 உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு...... 29

1.3.1 புகையிரத வீதி ...... 29

1.3.2 சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை ...... 30

1.3.3 புகையிரத அணி ...... 30

1.4 நிதி முன்னேற்றம்...... 31

**2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் ......32**

2.1 பின்னணி ...... 32

2.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிகள். ...... 32

2.3 செயற்பாடு (2013 ஜனவரி - திசம்பர் 31) ...... 32

**3. இலங்கைப் போக்குவரத்துச் சபை......37**

3.1 சமூகப் பயன்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பங்களிப்பு 37

3.2 பேரூந்துக்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்றம். ...... 38

3.3 இலங்கைப் பேரூந்துக்கள் அணி ...... 41

3.4 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மனித வளம் ...... 42

3.5 இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். ...... 44

**4. தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம்......46**

4.1 அறிமுகம் ...... 46

4.2 நோக்குகள்...... 46

4.3 நிறுவனத்தின் பணிகள்...... 46

4.4 தற்போதைய செயற்பாடு. ...... 47

4.5 நிறுவனத்தின் வருமானங்கள், செலவினங்கள் நிலை...... 51

**5. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு ......52**

5.1 அறிமுகம் ...... 52

5.2 2013 ஆம் ஆண்டில் நிறுவனம் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் (பௌதிகம் மற்றும் நிதிசார்) ...... 52

5.3 உட்கட்டமைப்பு வசதிகள் ...... 52

5.4 விளைதிறன் நிகழ்ச்சித் திட்டங்கள் ...... 52

# 1 ஆவது பிரிவு

## அமைச்சின் செயற்பாடு

## 1. அறிமுகம்

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கு வினைத்திறன் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை அத்தியாவசியமான கருவியொன்றாக இருப்பதால் சுமையான பணியொன்று போக்குவரத்து அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாட்டில் இடம்பெறுகின்ற துரிதகதியான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியுடன் போக்குவரத்துத் துறையில் இடம்பெற வேண்டிய காலத்தின் தேவைகள் வேறுபட்டு வருவதுடன் அமைச்சின் கீழ்க் காணப்படுகின்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து அமைச்சின் அலுவலகம் 2013 ஆம் ஆண்டில் செயற்பட்ட முறைமை தொடர்பான தகவல்கள் இவ் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை மிகவும் விளைதிறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவது தொடர்பாகப் பாதீட்டு ஒதுக்கீடுகளை சிறந்த முகாமையுடன், பௌதிக மற்றும் மனித விருத்தி தொடர்பாக எடுக்கப்பட்டு வருகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் அத்தீர்மானங்களை அமுற்படுத்தும்போது அமைச்சின் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினூடாக 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ள பணிகள் தொடர்பான விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற இலங்கைப் புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் மோட்டார் வாகனக் போக்குவரத்துத் திணைக்களம் போன்ற அனைத்து நிறுவகங்களின் வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கைகள் விரிவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. முழுமையாக போக்குவரத்து அமைச்சின் செயற்பாட்டினை எடுத்துக் காட்டுவதற்காக அதன் நிறுவனங்களினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் தொடர்பான பொழிப்புக் குறிப்புக்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்

### 2.1. 2013 ஆம் ஆண்டினுள் காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்

#### 2.1.1. அமைச்சரவை விஞ்ஞாபனமும் மற்றும் அவதானிப்புக்களை முன்வைத்தலும்.

| நிறுவனம் | விபரம் |
|---|---|
| புகையிரதத் திணைக்களம் | மாத்தளைப் புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான சரக்கிருப்புக் களஞ்சியத்தினைப் பொதுச் சந்தையில் ஸ்தாபிப்பதற்கு மாத்தளை நகர சபைக்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைத்தல். |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு. | ஒறுகொடவத்தை மரக் கூட்டுத்தாபனத் தொகுதியினை புனர்நிர்மாணஞ் செய்வதற்கு புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான இரத்மலான எல்லைகளிலுள்ள காணித்துண்டு ஒன்றைப் பெற்றுக்கொள்ளல். |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரித்தான பேரூந்துத் தரிப்பிடத்தினைப் புனர்நிர்மாணஞ் செய்தல் மற்றும் மத்திய பேரூந்துத் தரிப்பிடத்தினை மேம்படுத்துகின்ற கருத்திட்டம் |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | கொழும்பு நகரத்தின் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு அரச காணிகளை ஒப்படைத்தல். |

**2.1.2 காணிப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிற பணிகள்.**

1. 2013 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2013 திசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் காணி தொடர்பான செயற்பாடுகளுக்குரிய 400 கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவ்வனைத்துக் கடிதங்களுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உரிய பகுதியினருடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

   - புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான அனுராதபுரத்தில் அமைந்துள்ள புகையிரத விளையாட்டு மைதானத்தினை அனுராதபுர மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஒப்படைத்தல்:-

     2013.05.31 ஆந் திகதியன்று இடம்பெற்ற இடத்தினைப் பரீட்சித்ததன் பிரகாரம் விளையாட்டு மைதானத்தின் பகுதியொன்றை வழங்குவதற்கு இணங்கி அதன் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

   - குத்தகை ஒப்பந்தம் எல்.ஏ. 35096 இலங்கைப் புகையிரதத் திணைக்களம் மற்றும் உபாலி பத்திரிகைச் சங்கத்தின் சிரேஸ்ட நீதிமன்ற வழக்கு இலக்கம். 125/19. :-

     உபாலி பத்திரிகை நிறுவனத்திற்கு கொடுப்பனவினை வழங்கக்கூடிய முறைமை தொடர்பாக அறிக்கையிடுவதற்கு புகையிரதத் திணைக்களத்தின் பிரதாக கணக்காளரின் தலைமையில் மூன்று பேரினைக் கொண்ட குழுவொன்றை 2013.05.10 ஆந் திகதியன்று நியமித்தல்.

   - இராணுவ வீரர்களின் எந்திர உபகரணத்திற்கான பாரிய கழஞ்சியத்தினை அமைப்பதற்கு இராகம புகையிரதத் தளத்திற்கு அருகே காணப்படும் காணி/ கட்டடங்களை ஒப்படைத்தல் (2013.04.09) :-

     இடத்தினைப் பரீட்சித்ததன் பின்னர் வழங்கக்கூடிய நிலப் பரப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

   - நாரம்மல பேரூந்துத் தரிப்பிடம் அமைந்துள்ள இடத்தினை பிரதேச சபைக்கு ஒப்படைத்தல் (2013.08.06) :- இணங்கிக் கொள்ளப்பட்டவாறு நாரம்மல பிரதேச சபையினால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நிறைவேற்ற வேண்டிய பணியினை நிறைவேற்றியதன் பின்னர் காணியினை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு இணங்கப்பட்டுள்ளது. அதில் நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குதல்.

   - புகையிரத வீட்டு வாடகைகள் வேறுபடுதல் (2013.10.10) :-

     புகையிரத வீட்டு வாடகைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளைக் கலந்துரையாடி 2013.05.28 அன்று புகையிரத பொது முகாமையாளருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் தீர்மானங்களை விரைவாக அமுற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. ஓபனாயக்க பொலிஸ் நிலையம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற புகையிரதப் பாதுகாப்பு இடத்தினைப் பொலிஸ் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

3. ஓமந்தை பளை புகையிரத மார்க்கத்தினை மீளவும் நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு தேவைப்படுகின்ற மேலதிகக் காணிப் பரப்புக்களைச் சுவீகரிப்பதற்கு 38(ஆ) பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் விரைவில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. ''புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறி வசித்துள்ள புகையிரதத் திணைக்களத்தின் ஊழியர்கள் மற்றும் அத்துமீறுதல்கள் தொடர்பான பொதுவான கொள்கையொன்றை தயாரித்தல்'' என்பதனை நோக்காகக் கொண்டு நியமிக்கப்பட்டுள்ள காணி உப குழுவின் நடவடிக்கைகள் இடம்பெறுதல்.

**2.2 2013 ஆம் ஆண்டினுள் புகையிரத தாபனப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள்**

- புகையிரதத் திணைக்களத்திற்குரித்தான அனைத்துப் பதவி நிலை பதவிகள் மற்றும் சேவைகளுக்கு உரித்தானவர்களை நியமிப்புச் செய்வதிலிருந்து ஓய்வூதியம் பெறுதல் வரையான இடமாற்றல்கள், பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கை, சேவை நீடிப்புச் செய்தல் வரையான கடமைகளினை நிறைவேற்றல் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரிய கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மீளவும் சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய கடமைச் செயற்பாடுகளை அமைச்சினூடாக உரிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினூடாக நிறைவேற்றல்.

- வெளிநாட்டு விடுமுறை, திடீர் விபத்து விடுமுறை, திடீர் விபத்து இழப்பீடு தொடர்பான கடமையினை நிறைவேற்றல்.

- தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக சேவையிலிருந்து விடுவித்தல், தொழிற்சங்கக் கோரிக்கைகள் மற்றும் ஏனைய முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான புகையிரதக் கடவைகள், மரக்குற்றிகள் உள்ளடங்கலான அகற்றப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக குழுவொன்றை நியமித்து அக்குழுவின் பரிந்துரையினை அமுற்படுத்துதல்.

- புகையிரதத் திணைக்களத்திற்கு சேவைக்காக வருகைதருகின்ற வெளிநாட்டவர்களுக்கான வீசா அனுமதிப் பத்திரங்களை வழங்குகின்ற செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

- புகையிரதத் திணைக்களத்தில் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் யூலைப் பணி நிறுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்குரிய கடமையினை நிறைவேற்றல்.

- புகையிரதத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதுடன் திருத்தியமைக்கப்பட்ட புதிய ஆளணியினர் மற்றும் அ.நி.உ.சு 6/2006 இன் பிரகாரம் அந்தந்த பதவிகளுக்கான சம்பள அளவுகள் 2013.04.09 ஆந் திகதி முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவுகளானவை மேலும் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன.

- பின்வரும் பதவிகளுக்கு அ.நி.உ.சு 6/2006 இன் பிரகாரம் இற்றை வரையில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன். அந்தத் திட்டமும் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

    - புகையிரதப் பொறுப்பதிகாரி சேவை
    - புகையிரதக் கண்காணிப்பு முகாமைத்துவச் சேவை
    - புகையிரத சாரதிகள் பதவி.
    - புகையிரதக் காப்பாளர் சேவை
    - சாரதி உதவியாளர்

- ஏனைய பதவிகளுக்குரிய அரசாங்க நிர்வாக சுற்றுநிரூபம் 6/2006 இன் பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புத் திட்டச் சம்பள மற்றும் ஆளணியினர் குழுவின் செயலாளர் மற்றும் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- முப்படைச் சேவையிலிருந்து அகற்றிப் புகையிரதப் பாதுகாப்புச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள 115 உத்தியோகத்தர்கள் மற்றும் இற்றை வரையில் கடமையாற்றி வருகின்ற 13 ஓய்வூதியர்களின் சேவைக் காலத்தினை ஒப்பந்த அடிப்படையில் வைத்திருத்தல் மற்றும் 102 ஏனைய உத்தியோகத்தர்கள் புகையிரதப் பாதுகாப்புச் சேவைக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

- நீண்ட காலமாக புகையிரதத் திணைக்களத்தில் 45 வருடங்கள் கடந்ததன் காரணமாக நிரந்தரச் சேவைக்கு நியமிப்பதற்கு இயலாது போயுள்ள 325 மூங்கில் கேற்றுப் பாதுகாவலர்களின் சேவையினை நிரந்தரமாக்குவதற்கு அமைச்சின் விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக அவர்கள் 60 வருடங்களைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற தினமன்றைய சேவைக்காலம் மற்றும் இறுதியாகப் பெற்றுக் கொண்ட சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்

2013 ஆம் ஆண்டில் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடு.

2013 ஆம் ஆண்டின் முன்னெடுக்கப்பட்ட புதிய வழக்குகளின் எண்ணிக்கை - 12

மனித உரிமைகள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 04

மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டமூலத்தின் கீழ் விதிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எண்ணிக்கை - 06

### 2.4. மனித வள அபிவிருத்தி தொடர்பாக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.

| | பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **வெளிநாடு** | **54** | **189** |
| போக்குவரத்து அமைச்சு | 17 | 24 |
| புகையிரதத் திணைக்களம் | 25 | 135 |
| மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 10 | 28 |
| இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை | 2 | 2 |
| | | |
| **வெளிநாடு** | **41** | **70** |

## 2.5 நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய விடயங்கள்.

உள்ளக நிர்வாகப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற பணிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| நிகழ்ச்சித் திட்டம் | செயற்பாடுகள் |
|---|---|
| 1. தபால்கள் | i) கிடைக்கின்ற மற்றும் அனுப்புகின்ற கடிதங்களை ஒப்படைத்தல்.<br>ii) அன்றாடக் கடிதங்களைப் பகிர்தல்.<br>iii) தபால் முத்திரை இயந்திரத்தினைப் பேணுதல் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 2. சுய விபரக்கோவைகளினைப் பேணுதல்.<br>★ பதவிநிலை உத்தியோகத்தர்கள்<br>★ மொழிபெயர்ப்பாளர் சேவை<br>★ தொழில்நுட்பச் சேவை<br>★ திட்ட வல்லுனர்கள்<br>★ சாரதிகள்<br>★ பட்டதாரிச்சேவை<br>★ அ.மு.உ.சேவை<br>★ கா.சே.சே சேவை<br>★ தொழிற்சாலை உத்தியோகத்தர்கள்<br>★ தற்காலிக ஊழியர்கள் | i) வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளல், அங்கீகரித்தல்.<br>ii) சம்பள ஏற்றங்களை வழங்கும் நடவடிக்கைகள்.<br>iii) உயர்வினை வழங்குதல்/நியமித்தல் (பதிற் கடமைகளை நிறைவு செய்தல்) நடவடிக்கைகள்.<br>iv) இளைப்பாறும் நடவடிக்கைகள்.<br>v) இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள்.<br>vi) வெளிநாட்டு விடுமுறை தொடர்பான நடவடிக்கைகள்<br>vii) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்தினைத் தயாரித்தல், அங்கீகாரத்திற்காக முன்வைத்தல்.<br>viii) நி.பி. 71 ஐத் தயாரித்தல் (பதவிகளை உருவாக்குதல்)<br>ix) உள்ளீர்த்தல்<br>x) சம்பள மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>xi) வினைத்திறன் பரீட்சைக்கு விண்ணப்பத்தினைக் கோருதல்.<br>xii) சேவைச் சான்றிதழினை வழங்குதல்.<br>xiii) பரீட்சைக்கான விண்ணப்பத்தினைப் பரிந்துரை செய்து முன்வைத்தல். |
| 3. கௌரவ அமைச்சரின் அலுவலகக் குழாம் மற்றும் கௌரவப் பிரதியமைச்சரின் அலுவலகக் குழாம் தொடர்பான நடவடிக்கைகள். | i) கௌரவ அமைச்சர், கௌரவ பிரதியமைச்சரின் பிரத்தியேக அலுவலகக் குழாமினை நியமித்தல் உள்ளடங்கலான அனைத்துச் செயற்பாடுகள்.<br>ii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு விண்ணப்பப் படிவங்களை முன்வைத்தல். |
| 4. அமைச்சரவைக் குழாமுக்குரிய கடன் மற்றும் முற்பணம் | i) சொத்துக் கடன் விண்ணப்பப் படிவத்தினை அங்கீகாரத்திற்கு முன்வைத்து வங்கிக்கு அனுப்புதல்.<br>ii) இடர் கடன்/பண்டிகை முற்பணம்/விசேட முற்பணம் விண்ணப்பப் படிவங்களை அங்கீகரித்து கொடுப்பனவுக்காக முன்வைத்தல்.<br>iii) சட்டத்தரணி ஆணைச்சீட்டினை இரத்துச்செய்தல்/ பிணை வைப்பினை விடுவித்தல் |

| | |
|---|---|
| 5. அக்ரகார காப்புறுதிச் செயற்பாடுகள் | i) அமைச்சின் உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படுகின்ற அக்ரகாரப் பயன்களைக் கோருகின்ற விண்ணப்பப் படிவங்களை உறுதிசெய்து காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு முன்வைத்தல்.<br>ii) இலத்திரனியல் அக்ரகார அட்டைகளை வழங்குவதற்காக உத்தியோகத்தர்களின் விண்ணப்பப் படிவங்களை அக்ரகார நிதிய அலகுக்கு அனுப்புதல் மற்றும் இலத்திரனியல் அக்ரகார அட்டைகளை உத்தியோகத்தர்களுக்குப் பகிர்ந்தளித்தல். |
| 6. தேர்தல் கடமைகள் | மாகாணத் தேர்தல்களுக்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |
| 7. ஒழுக்காற்று நடவடிக்கைகள். | i) ஒழுக்காற்றுப் பரிசீலனை தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் கேட்கப்பட்ட விடயங்கள்/அறிக்கைகளை முன்வைத்தல்.<br>ii) வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104. நி.பி. 105 அறிக்கைகளைத் தயாரித்தலும் மற்றும் தேவையான ஆவணங்களைப் பெற்று கோவைப்படுத்துதல்.<br>iii) வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணையினை மேற்கொள்வதற்கு புலனாய்வுச் சபையினை நியமித்தல். |
| 8. ஊடக அலகின் பற்றுச்சீட்டுக்கள் | கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவப் பிரதியமைச்சர் பங்குபற்றிய அலுவலக வைபவங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோவுக்கான உரிய பற்றுச்சீட்டுக்களின் கட்டணங்களின் உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்து கணக்குகள் பிரிவுக்கு அனுப்புதல். |
| 9. தொலைபேசி/நீர்/ மின்சாரம்/உத்தியோகபூர்வ வதிவிடங்கள்/ வரிப்பணம் தொடர்பான நடவடிக்கைகள். | i) கௌரவ அமைச்சரின் அலுவலகம்/பிரதியமைச்சரின் அலுவலகம், வதிவிடத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்களைத் தீர்த்தல்.<br>ii) அமைச்சின் செயலாளர் மற்றும் அலுவலகக் குழாமின் நேரடி மற்றும் உள்ளகத் தொலைபேசிக் கட்டணங்களைப் பேணுகின்ற நடவடிக்கைகள்.<br>iii) புதிய தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.<br>iv) நீர்க்கட்டணங்கள் மற்றும் மின்சாரக் கட்டணங்களை அறிவிடுதல். |
| 10. சுத்தஞ் செய்கின்ற செயற்பாடுகள் | சுத்தஞ் செய்கின்ற (துப்புரவு) செயற்பாடுகளுக்குக் கொடுப்பனவுகள் இடம்பெறுதல். |
| 11. பிரதியெடுக்கும் இயந்திரங்கள் தொடர்பான செயற்பாடுகள் | i) பேணல்<br>ii) ஊக்குவிப்புக் கொடுப்பனவினை ஆரம்பித்துக் கொண்டு செல்லல். |
| 12. சிற்றூழியர்களின் சீருடைகள் தொடர்பான நடவடிக்கையினை எடுத்தல். | வருடாந்தம் சீருடைகளுக்கான துணிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| 13. அடையாள அட்டைகள் மற்றும் புகையிரத, பேரூந்து இலவசப் பயண ஆணைச்சீட்டுக்களுடன் தொடர்பான நடவடிக்கைகள். | i) அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் முகாமைச் செயற்பாடுகள்.<br>ii) புகையிரத. பேரூந்துப் போக்குவரத்து ஆணைச்சீட்டுக்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் |
| 14. பத்திரிகைகள் தொடர்பான நடவடிக்கைகள். | பத்திரிகைகளை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள். |
| 15. உணவு பானங்களை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள். | அமைச்சுக்கான உணவு பானங்கள் தொடர்பான நடவடிக்கைகள். |
| 16. வெளி நிறுவனங்களுடனான தொடர்புகள் | i) பல்வேறு வெளிக்களங்கள் தொடர்பான நிறுவனங்களைத் தொடர்புபடுத்துதல்.<br>ii) வெளி நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்டுகின்ற விடயங்கள் தொடர்பாக உள்ளக ரீதியில் தெளிவுபடுத்துதல். |
| 17. விடுமுறை தொடர்பான நடவடிக்கைகள். | i) அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர் குழாமின் மாதாந்த வரவு மற்றும் வெளிச்செல்லும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.<br>ii) விடுமுறைப் பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தல்.<br>iii) கடமை விடுமுறைகளைப் பதிவு செய்தல் மற்றும் கடிதப் கோவைகளை முன்னெடுத்தல்.<br>iv) போக்குவரத்துச் செலவினங்கள், விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டுகளை வழங்குதல் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல்.<br>v) வெளிநாட்டு விடுமுறை, பிரசவ விடுமுறையினைப் பதிவு செய்தல் மற்றும் ஆவணக் கோவைகளை முன்னெடுத்தல். |
| 18. சுற்றுலா விடுதி | i) புகையிரதத் திணைக்களத்திற்குரித்தான சுற்றுலா விடுதியினை ஒதுக்குதல் மற்றும் அதற்குரித்தான பணத்தினை புகையிரதத் திணைக்களத்திற்கு மீள் நிரப்புதல்<br>ii) அதற்குரித்தான பதிவேடுகளை ஆரம்பித்துக் கொண்டு செல்லல். |
| 19. அமைச்சின் கட்டிட நடவடிக்கைகள் | i) அமைச்சின் கட்டிங்களின் தேவைப்பாடுகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு தேவையானவற்றை மேற்கொள்ளல்.<br>ii) புதிய வாகனத் தரிப்பிடத்தினை மேம்படுத்துவதற்கான தேவையான பதிவேடுகளை ஆரம்பித்துக்கொண்டு செல்லல். |
| 20. ஆய்வு நடவடிக்கைகள். | ஆய்வு விசாரணை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல். |
| 21. பொருட் பதிவேடு | அமைச்சின் பொருட்பதிவேட்டு ஆவணம், பொருட் பதிவேட்டுப் புத்தகத்தினை முன்னெடுத்துல் செல்லல் மற்றும் நாளதுவரைப்படுத்தல். |
| 22. தேசத்திற்கு மகுடம் | 2014 தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| 23. அரச நிறுவனங்களின் முகவரிகள் வேறுபடுதல். | இதன் கீழ் அமைச்சுக்குக் கிடைக்கின்ற முகவரிகள் அல்லது தொலைபேசி இலக்கங்கள் வேறுபட்டமை தொடர்பாக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அறிவித்தல். |
| 24. சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுத்தல். | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உரிமை உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். |
| 25. பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டங்களன | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கூட்டங்களை ஒழுங்கமைத்தல். |
| 26. உள்ளக நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள். | உள்ளக நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்களினை பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக பங்குபற்றச் செய்யும் நடவடிக்கைகள். |
| 27. ஆவணப் பதிவாளரின் கடமை | i) சுயவிபரக் கோவையினைப் பேணல்<br>ii) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்/வழங்குதல் |
| 28. ஆட்சேர்ப்புத் திட்டம் | தயாரிப்பதற்கான உரிய அனைத்துச செயற்பாடுகள். |
| 29. அமைச்சின் முகாமைத்துவ மறுசீரமைப்பின் செயற்பாடு. | தேவையான பணிகளை பூர்த்து செய்தல் |
| 30. அரசகரும மொழிக் கொள்கையினை அமுற்படுத்தல். | உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்தல். |
| 31. டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் | உரிய நடவடிக்கைகளை நிறைவு செய்தல். |

## 3. நிதி சார் முகாமை மற்றும் முன்னேற்றம்

### 3.1 கொ கொ ன கொளயள்ளகொள்முதற் குழு

| | | 2013 ஆம் ஆண்டில் அமுற்படுத்தப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை | 2013 ஆம் ஆண்டில் புஸீரத்தி செய்யப்பட்ட கொள்முதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதற் குழு | 08 | 01 |
| 02 | அமைச்சுக் கொள்முதற் குழு | 33 | 14 |

### 3.2 நிதி சார் முகாமை

| | | |
|---|---|---|
| 01 | 2013 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் உண்மைச் செலவுகள் | உரிய அறிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன. |
| 02 | ஒதுக்கீடுகளை மீறி செலவு செய்யப்பட்டுள்ள செலவுத் தலைப்பு | இல்லை |
| 03 | வினைத்திறனை அதிகரிப்பதற்குச் செய்ய வேண்டிய பணிகள். | புதிதாக வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களின் விடயம் தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளுக்கு பங்குகொள்ளுதலுடன், ஏனைய உத்தியோகத்தர்கள் வினைத்திறனுடன் கடமை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். |
| 04 | 2013 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திறைசேரியுடன் இணக்கஞ் செய்தல். | அனைத்து அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்டுள்ளன. |

**EEXPENDITURE REPORT As At 31.12.2013**
**Head - 114 - Ministry of Transport**
**Programme - 01 - Operational Activities**
**Project - 01 - Minister's office**

| ub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of December | % |
|---|---|---|---|---|---|
| 0 | | **Recurrent Expenditure** | **52,750,000.00** | **46,889,602.69** | **88.89** |
| | | **Personal Emoluments** | **13,987,313.00** | **13,333,579.87** | 95.33 |
| | 1001 | Salaries & Wages | 8,000,000.00 | 7,648,798.20 | 95.61 |
| | 1002 | Overtime and Holiday payments | 1,987,313.00 | 1,987,312.07 | 100.00 |
| | 1003 | Other Allowances | 4,000,000.00 | 3,697,469.60 | 92.44 |
| | | **Travelling Expenses** | **2,969,647.00** | **2,720,944.80** | 91.63 |
| | 1101 | Domestic | 1,469,647.00 | 1,469,647.00 | 100.00 |
| | 1102 | Foreign | 1,500,000.00 | 1,251,297.80 | 83.42 |
| | | **Suppliers** | **14,850,000.00** | **13,557,384.77** | 91.30 |
| | 1201 | Stationery & Office Requisites | 2,750,000.00 | 2,066,306.25 | 75.14 |
| | 1202 | Fuel | 12,000,000.00 | 11,472,602.52 | 95.61 |
| | 1203 | Diets & Uniform | 100,000.00 | 18,476.00 | 18.48 |
| | | **Maintenance Expenditure** | **11,400,000.00** | **8,943,705.80** | 78.45 |
| | 1301 | Vehicles | 10,200,000.00 | 8,744,396.20 | 85.73 |
| | 1302 | Plant Machinery & Equipment | 900,000.00 | 183,759.60 | 20.42 |
| | 1303 | Building & Structures | 300,000.00 | 15,550.00 | 5.18 |
| | | **Services** | **9,543,040.00** | **8,333,987.45** | 87.33 |
| | 1401 | Transport | 3,893,380.00 | 3,893,380.00 | 100.00 |
| | 1402 | Postal & Communication | 2,500,000.00 | 2,285,260.73 | 91.41 |
| | 1403 | Electricity & Water | 849,660.00 | 54,863.62 | 6.46 |
| | 1405 | Other | 2,300,000.00 | 2,100,483.10 | 91.33 |
| | | **Capital Expenditure** | **5,409,018.00** | **2,515,626.36** | **46.51** |
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **3,900,000.00** | **2,310,438.37** | 59.24 |
| | 2001 | Building & Structures | 800,000.00 | 620,256.00 | 77.53 |
| | 2002 | Plant Machinery & Equipment | 600,000.00 | 0.00 | 0.00 |
| | 2003 | Vehicles | 2,500,000.00 | 1,690,182.37 | 67.61 |
| | | **Acquisition of Capital Assets** | **1,509,018.00** | **205,187.99** | 13.60 |
| | 2102 | Furniture & office Equipment | 600,000.00 | 140,737.99 | 23.46 |
| | 2103 | Plant Machinery & Equipment | 0.00 | | |
| | | Media Unit Equipment | 800,000.00 | 52,200.00 | 6.53 |
| | | Other Machinery | 109,018.00 | 12,250.00 | 11.24 |
| | | **Project Total** | **58,159,018.00** | **49,405,229.05** | **84.95** |

**EXPENDITURE REPORT As At 31.12.2013**

**Head - 114 - Ministry of Transport**

**Programme - 01 - Operational Activities**

**Project - 02 - Administration & Establishment Services**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of December | % |
|---|---|---|---|---|---|
| **0** | | **Recurrent Expenditure** | **101,500,000.00** | **94,010,093.86** | **92.62** |
| | | **Personal Emoluments** | **57,084,480.00** | **52,878,171.00** | 92.63 |
| | 1001 | Salaries & Wages | 36,451,049.00 | 32,244,741.32 | 88.46 |
| | 1002 | Overtime and Holiday payments | 2,510,647.00 | 2,510,646.49 | 100.00 |
| | 1003 | Other Allowances | 18,122,784.00 | 18,122,783.19 | 100.00 |
| | | **Travelling Expenses** | **2,422,331.00** | **2,422,330.10** | 100.00 |
| | 1101 | Domestic | 711,607.00 | 711,606.92 | 100.00 |
| | 1102 | Foreign | 1,710,724.00 | 1,710,723.18 | 100.00 |
| | | **Suppliers** | **11,450,000.00** | **10,624,411.63** | 92.79 |
| | 1201 | Stationery & Office Requisites | 5,250,000.00 | 4,999,244.35 | 95.22 |
| | 1202 | Fuel | 6,000,000.00 | 5,478,032.28 | 91.30 |
| | 1203 | Diets & Uniform | 200,000.00 | 147,135.00 | 73.57 |
| | | **Maintenance Expenditure** | **9,893,189.00** | **9,096,704.13** | 91.95 |
| | 1301 | Vehicles | 7,000,000.00 | 6,934,999.74 | 99.07 |
| | 1302 | Plant Machinery & Equipment | 1,893,189.00 | 1,893,188.64 | 100.00 |
| | 1303 | Building & Structures | 1,000,000.00 | 268,515.75 | 26.85 |
| | | **Services** | **19,500,000.00** | **18,409,500.09** | 94.41 |
| | 1401 | Transport | 1,600,000.00 | 1,499,740.32 | 93.73 |
| | 1402 | Postal & Communication | 3,000,000.00 | 2,700,862.50 | 90.03 |
| | 1403 | Electricity & Water | 7,000,000.00 | 6,962,925.24 | 99.47 |
| | 1404 | Rents and Local Taxes | 150,000.00 | 126,000.00 | 84.00 |
| | 1405 | Other | | | |
| | | Dayata Kirula | 3,000,000.00 | 2,393,258.47 | 79.78 |
| | | Other (Including Cleaning Service) | 4,750,000.00 | 4,726,713.56 | 99.51 |
| | | **Transfers** | **600,000.00** | **565,331.91** | 94.22 |
| | 1506 | Property Loan Interest to Public Servants | 600,000.00 | 565,331.91 | 94.22 |
| | | **Other Recurrent Expenditure** | **50,000.00** | **0.00** | 0.00 |
| | 1701 | Losses And Write Off | 50,000.00 | | 0.00 |
| 1 | | **Uthuru Mithutu Development Programme** | **500,000.00** | **13,645.00** | 2.73 |
| | 1405 | Other | 500,000.00 | 13,645.00 | 2.73 |
| | | **Capital Expenditure** | **6,990,982.00** | **3,755,500.07** | 53.72 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **Rehabilitation and Improvement of Capital Assets** | **2,600,000.00** | **1,573,601.56** | 60.52 |
| | 2001 | Building & Structures | 500,000.00 | 103,201.56 | 20.64 |
| | 2002 | Plant Machinery & Equipment | 600,000.00 | 0.00 | 0.00 |
| | 2003 | Vehicles | 1,500,000.00 | 1,470,400.00 | 98.03 |
| | | **Acquisition of Capital Assets** | **2,390,982.00** | **1,698,456.31** | 71.04 |
| | 2102 | Furniture & office Equipment | 1,000,000.00 | 307,474.55 | 30.75 |
| | 2103 | Plant Machinery & Equipment | 1,390,982.00 | 1,390,981.76 | 100.00 |
| | | **Capacity Building** | **2,000,000.00** | **483,442.20** | 24.17 |
| | 2401 | Training and Capacity Building | | | |
| | | Training and Capacity Building | 2,000,000.00 | 483,442.20 | 24.17 |
| | | **Project Total** | **108,490,982.00** | **97,765,593.93** | **90.11** |

**EXPENDITURE REPORT As At 31.12.2013**

**Head - 114 - Ministry of Transport**

**Programme - 0 2 - Development Activities**

**Project - 03 - Development of Road Transport**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of December | % |
|---|---|---|---|---|---|
| | | **Recurrent Expenditure** | **6,877,750,000.00** | **6,752,301,805.86** | **98.18** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **6,856,750,000.00** | **6,733,501,805.86** | 98.20 |
| | 1503 | **Public Institution** | | | |
| | | School & Higher Education Season Ticket Subsidy | 1,430,000,000.00 | 1,430,000,000.00 | 100.00 |
| | | Armed Forces - Bus Passes | 291,750,000.00 | 168,501,805.86 | 57.76 |
| | | Grants to SLTB - Operating on Unremunerative Routes | 2,335,000,000.00 | 2,335,000,000.00 | 100.00 |
| | | Financial Assistance to SLTB | 2,800,000,000.00 | 2,800,000,000.00 | 100.00 |
| **3** | | **Lakdiva Engineering Company (Pvt.) Ltd.** | **21,000,000.00** | **18,800,000.00** | 89.52 |
| | 1503 | Public Institution | 21,000,000.00 | 18,800,000.00 | 89.52 |
| | | | | | |
| | | **Capital Expenditure** | **1,930,000,000.00** | **1,238,052,017.13** | **64.15** |
| **1** | | **Sri Lanka Transport Board** | **1,920,000,000.00** | **1,237,219,409.58** | 64.44 |
| | 2201 | **Public Institution** | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Purchase of New Buses/ Engine kits | 1,000,000,000.00 | 380,242,080.00 | 38.02 |
| | | Bus Fleet Augmentation, Institutional Development and Capacity Building | 900,000,000.00 | 853,626,220.00 | 94.85 |
| | | Dayata Kirula | 20,000,000.00 | 3,351,109.58 | 16.76 |
| **5** | | **Implementation of Strategic Plan for Traffic Management (TEC is Rs: 10bn)** | **10,000,000.00** | **832,607.55** | 8.33 |
| | 2502 | Other Investments | 10,000,000.00 | 832,607.55 | 8.33 |
| | | **Project Total** | **8,807,750,000.00** | **7,990,353,822.99** | 90.72 |

**EXPENDITURE REPORT As At 31.12.2013**
**Head - 114 - Ministry of Transport**
**Programme - 02 - Operational Activities**
**Project - 04 - Development of New Rail Road**

| Sub Project | Object Code | Category/Object Title | Total Net Provision | Total Actual Expenditure end of December | % |
|---|---|---|---|---|---|
| | | **Capital Expenditure** | **4,056,000,000.00** | **3,310,552,114.27** | **81.62** |
| **1** | | **Matara - Beliatta-Kataragama New Rail line** | **4,000,000,000.00** | **3,298,958,452.33** | 82.47 |
| | 2104 | Building & Structures | **3,550,000,000.00** | **3,272,221,301.02** | 92.18 |
| | | | 3,200,000,000.00 | 3,200,000,000.00 | 100.00 |
| | | | 350,000,000.00 | 72,221,301.02 | 20.63 |
| | 2105 | Lands and Land Improvements | **450,000,000.00** | **26,737,151.31** | 5.94 |
| | | Lands Acquisition & Payment of Compensation | 200,000,000.00 | 21,234,742.07 | 10.62 |
| | | Detail design investigation & Collection of Base Line data | 50,000,000.00 | 3,931,170.82 | 7.86 |
| | | Relocation of Infrastructure facilities & Clearing of Railway Trace | 200,000,000.00 | 1,571,238.42 | 0.79 |
| **4** | | **Kottawa-Horana - Rail Line** | **6,000,000.00** | **0.00** | 0.00 |
| | 2105 | Lands and Land Improvements | 6,000,000.00 | 0.00 | 0.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **5** | | **Kurunegala - Habarana Rail track project** | **10,000,000.00** | **3,618,064.80** | 36.18 |
| | 2105 | Lands and Land Improvements | 10,000,000.00 | 3,618,064.80 | 36.18 |
| **6** | | **Colombo - Hambantota (kelanivally) Line Extension project** | **15,000,000.00** | **0.00** | 0.00 |
| | 2105 | Lands and Land Improvements | 15,000,000.00 | 0.00 | 0.00 |
| **7** | | **Madawachchiya - Trincomalee Rail Line Feasibility Study** | **10,000,000.00** | **6,752,740.00** | 67.53 |
| | 2105 | Lands and Land Improvements | 10,000,000.00 | 6,752,740.00 | 67.53 |
| **8** | | **Wellavaya - Bibila - Badulla New Rail Line** | **10,000,000.00** | **1,222,857.14** | 12.23 |
| | 2105 | Lands and Land Improvements | 10,000,000.00 | 1,222,857.14 | 12.23 |
| **9** | | **Trincomalee - Maho - Puttalam New Rail Line** | **5,000,000.00** | **0.00** | 0.00 |
| | 2105 | Lands and Land Improvements | 5,000,000.00 | 0.00 | 0.00 |
| | | **Project Total** | **4,056,000,000.00** | **3,310,552,114.27** | **81.62** |
| | | | | | |
| | | **HEAD RECCURENT TOTAL** | **7,032,000,000.00** | **6,893,201,502.41** | **98.03** |
| | | **HEAD CAPITAL TOTAL** | **5,998,400,000.00** | **4,554,875,257.83** | **75.93** |
| | | **HEAD TOTAL** | **13,030,400,000.00** | **11,448,076,760.24** | **87.86** |

**4. 2013 ஆம் ஆண்டினுள் திட்டமிடற் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்.**

1. புகையிரதத் திணைக்களம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம், லக்திவ என்ஜினியர் அமைப்பு மற்றும் வீதிப்பாதுகாப்புக்கான தேசிய சபை போன்ற நிறுவகங்களுடன் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடாத்துதல்.

2. 2013 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் செயற்திட்டத்தினைத் தயாரித்தலுக்கான முன் வேலைத்திட்டத்தினை நடாத்துதல் மற்றும் அச்செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

3. 2013 ஆம் ஆண்டின் போக்குவரத்து அமைச்சின் பல்வேறு நிறுவகங்களினூடாக அமுற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் அந்நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் பெறுபேறுகள் அடிப்படை முகாமையின் கீழ் இடம்பெறுகின்ற முறைமை தொடர்பான வேலைத்திட்டத்தினை நடாத்துதல்.

4. 2013 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.

5. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவகங்களின் மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

6. ஜனாதிபதியின் தலைமையில் மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்ட மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் பங்குகொள்ளல் மற்றும் போக்குவரத்து அமைச்சு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்காக முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக தீர்மானங்களை எடுத்தல்.

7. 2014 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரித்தலுக்கு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் கலந்துரையாடல்களில் பங்குகொண்டு கணக்குகள் பிரிவுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

8. போக்குவரத்து அமைச்சின் விலைமனுக்கோரல்/தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

9. 50 மில்லியனுக்கு அதிகமான போக்குவரத்துப் பிரிவு தொடர்பான கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அமைச்சுக்கு முன்வைத்தல்.

10. 2014 பாராளுமன்ற பாதீட்டுக் குழுநிலை வாதத்திற்கு முன்வைப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

11. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் அமைச்சு அலுவலகத்தின் செயற்பாட்டு அறிக்கையினைத் தயாரித்து முன்வைத்தல்.

12. அமைச்சரவையினூடாக வெளிப் பங்குதாரர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்கள் (Unsolicited Project Proposals) தொடர்பாக தேசிய திட்டமிடற் திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள விசேடக் குழுவுடன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், கலந்துரையாடல்களில் பங்கு கொள்ளல் மற்றும் உரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

13. இலங்கையின் உள் மற்றும் புற நகரங்களின் உரிய பிரதான போக்குவரத்து திட்டமொன்றைத் தயாரித்தலுக்கு வெளிநாட்டு வளத் திணைக்களத்தினூடாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனங்களுடன் Urban transport System Development project for Colombo metropolitan region and suburban. கருத்திட்டத்தினை ஆரம்பித்தல்.

14. போக்குவரத்து அமைச்சுக்குரிய இணையத்தளத்தினை அன்றாடம் நாளதுவரைப்படுத்துதல்.

15. தேசிய தகவல் நிலையம் (1919) மற்றும் ICTA நிறுவனத்துடன் இணைந்து போக்குவரத்து அமைச்சுக்கு உரித்தான தகவல்களைப் பரிமாறுதல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் மறுமொழிகளை முன்வைத்தல்.

16. புகையிரத வீதியிலுள்ள குறுக்கு வீதிகளுக்கான பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

17. ஏனைய நேரொத்த அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உரிய கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களில் கலந்துகொண்டு தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- தேசிய இடர் பாதுகாப்பு அமுற்படுத்துகைத் திட்டம்
- முதுமையுடன் தொடர்பான தேசிய அமுற்படுத்துகைத் திட்டம்
- காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும்போது முன் ஆயத்தத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்கின்ற வேலைத்திட்டம்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கான சமுதாய அடிப்படை நிகழ்ச்சித் திட்டம்
- நுகர்வு நலன்புரி தொடர்பான தேசியக் கொள்கை வரைவொன்றைத் தயாரித்தல்.
- வலுவினை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்
- மகிந்த சிந்தனை எதிர்காலத் தொலைநோக்கு விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்.
- தேசிய மனித வள மற்றும் தொழிற் கொள்கைகளை அமுற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.
- பிள்ளைகளின் சிநேகபூர்வ பாடசாலைகள் கல்வியின் தரத்தினை உயர்த்தும் பல பிரிவுகளுடனான வேலைத்திட்டம்.
- மனித உரிமைகள் தொடர்பாக உள்ளக அமைச்சின் செயற் குழு.

18. இலங்கையில் ஆரம்பிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 2013 பொது அரசாங்க சபைத் தலைமைத்துவ வேலைத்திட்ட ஒருங்கணைப்புச் செயற்பாடுகளில், போக்குவரத்து நடவடிக்கைகளை ஒப்படைக்கின்ற குழுவுக்கான ஆரம்பச் செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

19. இலங்கைப் போக்குவரத்து சபை மற்றும் பிரத்தியேகப் பேரூந்துக்களின் ஓட்டங்களை இணைத்து, நேர அட்டவணையின் பிரகாரம் இடம்பெறுவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

20. அலுவலகத்திலுள்ள பழைய ஆவணக் கோவைகளுக்கான பேரேட்டு முறைமையினைத் தயாரித்தல் மற்றும் ஆவணக் கோவைகளைப் புதுப்பித்தல்.

21. இலங்கையின் உள் மற்றும் புற நகரங்களில் போக்குவரத்துத் துறைகளில் தீர்வாகவுள்ள நிலக்கரிப் புகையினைக் குறைக்கின்ற திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு உலக வங்கியுடன் இணைந்து Colombo Low Carbon Urban Transport Study என்ற கருத்திட்டத்தினை ஆரம்பித்தல்.

22. பிரத்தியேகப் போக்குவரத்து அமைச்சினைத் தொடர்புபடுத்தி தேசிய போக்குவரத்துக் கொள்கைகளை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தல்.

23. வடக்கு புகையிரத மீள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பணிகளிளை மேற்கொண்டு அதன் மூலம் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

24. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு தீர்மானங்களை எடுத்தலும் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

25. 2014 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆசிய நகரங்களில் நிரந்தர சூழல் சார் போக்குவரத்து மகாநாட்டுடன் தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

26. போக்குவரத்து அமைச்சில் நூலகமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.

27. தெற்கு அதிவேக மார்க்கத்தினை கொழும்பினை நோக்கி விரிவுபடுத்துவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சின் கருத்திட்ட செயற்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

28. போக்குவரத்து அமைச்சுக்குரித்தான தற்போதைய முன்னேற்றத்தினை உள்ளடக்கிய குறுந்தகவலுடனான திரைப்படத்தினைத் தயாரித்தல்.

29. SAARC/UNESCAP போன்ற சர்வதேச மகாநாடுகளில் உரிய போக்குவரத்துத் துறையின் இலங்கையின் பிரதிநிதியாக உரிய பணிகளை மேற்கொள்ளல்.

30. 2013 சேத்திற்கு மகுடம் கண்காட்சிக்கான உரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

## 5. 2013 ஆம் ஆண்டின்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டுள்ள புலனாய்வுக் கடமை தொடர்பான விபரப் பொழிப்பு.

| | நிறுவனம் | இடம்பெற்ற ஆய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | போக்குவரத்து அமைச்சு | 03 |
| 2) | இலங்கைப் போக்குவரத்துச் சபை | 15 |
| 3) | புகையிரதத் திணைக்களம் | 01 |
| 4) | தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம் | 04 |
| 5) | லக்திவ பொறியியலாளர் நிறுவனம் | 03 |
| 6) | வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை | 01 |

## 6. புதிய புகையிரத வீதிகள் அபிவிருத்திப் பிரிவு

பொதுமக்களுக்கு வினைத்திறன் மற்றும் இலாபகரமான போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குவதற்காக நிலைபேறான தேசியப் போக்குவரத்துக் கொள்கையொன்றை கட்டியெழுப்புவதன் தேவைப்பாட்டினை அடையாளங்காண்பதனூடாகப் பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமையளிப்பதுடன், தற்போது அதிகமாக பெருந்தெருக்கள் முறைமையினூடாக இடம்பெறுகின்ற பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து புகையிரத சேவைகளுக்கு பாதுகாப்பை வழங்கும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத வீதி முறைமையினை மேம்படுத்துவதுடன் நவீன புகையிரத வீதி அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரேரிக்கப்பட்ட புதிய புகையிரத வீதிகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | கருத்திட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு (அ.டொ.மி.) | கருத்திட்டத்தின் கால வரையறை |
|---|---|---|---|
| 01 | மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரத வீதி (கி. மீ. 116) | 600 | 2006-2019 |
| 02 | குருனாகல் - கபரணை புதிய புகையிரத வீதி (கி. மீ. 80) | 225 | 2010-2016 |
| 03 | அவிசாவளை - ஹம்பாந்தோட்டை புதிய புகையிரத வீதி (கி.மீ. 225) | 375 | 2009-2016 |
| 04 | பாணந்துறை - கொறணை புதிய புகையிரத வீதி (கி.மீ.) | 53 | 2013-2017 |

அதற்கு மேலதிகமாக பின்வரும் புதிய புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டுக்கு பின்வருமாறு ஒதுக்கீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. மதவாச்சி - திருகோணமலை - ஒதுக்கீடு ரூபா. 10 மில்லியன்

2. வெல்லவாய, பிபில ஊடாக பதுளை - ஒதுக்கீடு ரூபா. 10 மில்லியன்

3. திருகோணமலை, மகவ ஊடாக புத்தளம் - ஒதுக்கீடு ரூபா. 05 மில்லியன்

### 6.1 மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதி

பின்வருமாறு மூன்று கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு பிரேரிக்கப்பட்ட இவ் வீதியின் முழுமையான நீளம் 115 கி.மீ. ஆகும்.

| கட்டங்கள் | தூர அளவு (கி.மீ) |
|---|---|
| 1. மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரை | 27 |
| 2. பெலிஅத்தவிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை | 48 |
| 3. ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரை | 40 |

இக்கருத்திட்டத்தின கீழ் தற்போது நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள்.

- மாத்தறை நில்வள கங்கையினூடாக 100 மீற்றர் நீளத்தினைக் கொண்ட பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் உட்கட்டமைப்பு அரசப் பொறியியலாளர் சபையினூடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பாகங்கள் ஒஸ்ரியாவிலிருந்து இறக்குமதி செய்து பொருத்தப்பட்டுள்ளது.. பாலத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்தப் பணம் ரூபா 263 மில்லியனாகும்.

- சூழற் காரணிகளை மதிப்பிடும் (EIA) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான பகுதிக்கு உரிய அறிக்கை நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளது.

- புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் தொல்பொருளியலை மதிப்பிடுகின்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- முதலாவது கட்டத்தின் கீழ் புகையிரத வீதியினை நிர்மாணித்தல், மீளக் குடியேற்றுகின்ற நடவடிக்கைகள் மற்றும் மாற்று உட்புகும் வீதிகளை நிர்மாணிப்பதற்கு 92.752 கெக்டயர் அளவினைக் கொண்ட காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் அகற்றப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 185 ஆகும்.

- ஒப்படைக்கப்பட்டுள்ள காணி (துண்டுகளின் எண்ணிக்கை 1499) - 92.752 கெக்டயர்

- புகையிரத மார்க்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 83.7316 கெக்டயர்

- மீளவும் குடியேற்றுவதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 8.6388 கெக்டயர்

- மாற்று வீதியினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி-2.4551 கெக்டயர்

  (தியகக மொட்டாகெதர வீதி, தெல்கல்ல வீதி, தேவானந்த வீதி)

- ஏனைய நிர்மாணிப்புக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணி - 1.3609 கெக்டயர்

- மீளக் குடியேற்றுதல் நடவடிக்கைகளுக்காக 10 மாற்று காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் 179 பேர்களுக்கு காணித்துண்டு வழங்கப்பட்டுள்ளது. உரிய காணிகளில் 39 வீடுகளின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் மேலும் 04 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன

மாற்று நிலத்தினை சுவீகரித்தல், அபிவிருத்தியினை மேற்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல்.

| நிலத்தின் (காணி) பெயர் | நிலத்துண்டுகளின் எண்ணிக்கை | பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள நிலத் துண்டுகளின் எண்ணிக்கை | இடம்பெற்ற அபிவிருத்திப் பணிகள் | நிர்மாணிக் கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | நிர்மாணிக் கப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பள்ளியகுறுகே வத்தை | 35 | 27 | a | 13 | 01 |
| சில்வடெல் வத்தை | 25 | 17 | b | 04 | 01 |
| ஆச்சாரிகே வத்தை | 43 | 25 | b | - | - |
| தங்கக வத்தை | 12 | 12 | b | - | - |
| பாளுவத்தை | 53 | 53 | b | 17 | 04 |
| சன்னாசிகே வத்தை | 25 | 20 | a | 01 | - |
| கறககேன | 26 | 10 | a | 03 | 01 |
| பண்சல காவ வத்தை | - | - | - | - | - |
| மகெதர வத்தை | 9 | 9 | b | - | - |
| றுக்அத்தன ககவத்தை | 13 | 6 | b | - | - |

a - வீதி தயாரிக்கப்பட்டு கொங்கிரிட் இடப்பட்டுள்ளது

b - நுழைவு வாயில்களின் ஆரம்பப் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

c - நிலம் சுத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

d - அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது

e - அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

- புகையிரத வீதியினை நிர்மாணிப்பதனால் அழிந்துபோகின்ற பொதுக் கட்டிடங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களுக்காக மாற்றுக் கட்டிடங்களை நிர்மாணித்தல்.

| | | |
|---|---|---|
| சிறிபவர விஜயராம விகாரை | - ரூபா. 8.5 மில்லியன் | பணி நிறைவு |
| வலஸ்கல களிமண் தொழிற்சாலை | - ரூபா. 9.0 மில்லியன் | |
| வவிதத்த கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம் | - ரூபா. 8.0 மில்லியன் | |
| வவிறுகன்னல கனிஸ்ட பாடசாலைக் கட்டிடம் | - ரூபா. 8.0 மில்லியன் | |
| சமுர்த்தி வங்கிக் கட்டிடம், வவிறுகன்னல | - ரூபா.9.6 மில்லியன் | |

- முதலாவது கட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக 2013.12.09 ஆந் திகதி சீனாவின் ஊஆஊ நிறுவனத்துடன் வர்த்தக உடன்படிக்கை செய்வதற்கு வந்துள்ளோம். தேவையான ஒதுக்கீடு கடன் முறைமையின் கீழ் சீனாவின் எக்சிம் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சீனாவின் ஊஆஊ நிறுவனத்தினால் புகையிரதக் கருத்திட்டத்தின் பணி ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிர்மாணிப்புப் பணிக்கள் இடம்பெற்று வருகின்றன.

**கருத்திட்டத்தின் கீழ் தற்போது இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள்.**

- முதலாவது கட்டத்தின் கீழ் பெலிஅத்த, பாளுவத்த மாற்று உட்பிரவேச வீதிகள் தற்காலிக அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- சன்னாசிகேவத்தை மாற்று வழியினை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- அழிந்து போகின்ற வியாபார ஸ்தலங்களுக்கான கடை நிலங்களை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- சுவீகரிப்பட்டுள்ள புகையிரதப் பாதைகளில் உள்ள மின் கம்பங்கள் மற்றும் தொலைபேசிக் கோபுரங்கள் அகற்றும் பணி 95மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- புகையிரத மார்க்கத்திற்கான அனைத்துத் திட்டங்களையும் தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிர்மாணிப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

**மூலதன முன்னேற்றம்.**

இக்கருத்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டுக்காகக் கிடைக்கப்பெற்ற நிதி ரூபா. 4,000 மில்லியனாவதுடன், 82.47% நிதி முன்னேற்றமொன்றினைக் காட்டிய ரூபா. 3,298.96 மில்லியன் நிதி குறிப்பிட்ட ஆண்டினுள் செலவு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கமைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பிரேரிக்கப்பட்ட வீதியில் மாற்றஞ் செய்ய வேண்டியதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவு மட்டத்தினை அடைவது கடினமாக உள்ளது.

### 6.2 களனி கங்கை புகையிரத மார்க்கத்தினை அவிசாவளையிலிருந்து கம்பாந்தோட்டை வரை நீடிப்புச் செய்தல்.

2009 - 2016 காலப் பகுதியினுள் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இவ் வீதியின் நீளம் 225 கி.மீற்றராகும். மொரட்டுவ பலக்லைக்கழகத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள வீதி தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. மதிப்பிடப்பட்ட நிதி ரூபா. 10.83 மில்லியனாவதுடன், தற்போது ரூபா. 541 மில்லியன் நிதி சாத்தியக்கூறுப் பணிக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் எந்தவொரு செலவும் கருத்திட்டத்தின் கீழ் இடம்பெறவில்லை.

### 6.3 குருனாகல் – கபரணை புதிய புகையிரத வீதி.

80 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்ட இக் கருத்திட்டத்தின் ஆய்வு நடவடிக்கைகள் பொறியியலாளர் பணி தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தினால் (CECB) இடம்பெற்று இறுதி அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. நிர்மாணிப்பதற்காக சுற்றாடல் அதிகாரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விபரப்படுத்தப்பட்ட சூழல் மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்வதற்காகப் பகிரங்க விலைமனுக் கோரல் கோரப்பட்டு அமைச்சு கொள்முதல் குழுவின் அங்கீகாரத்திற்கு அமைய, உரிய நிறுவனத்துடன் உடன்படிக்கையினை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே 2013 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபா. 10 மில்லியனில் ரூபா. 3.6 மில்லியன் குருனாகல் அளவைப் பிரதேசத்திற்கு உரித்தான பகுதியில் மத்திய கோட்டினை அடையாளமிடுவதற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

### 6.4 கொறணை – கொட்டாவ புதிய புகையிரத வீதி.

கொறணை - பாணந்துறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செய்முறை ஆய்வின்போது கவனத்திற்கொள்ளப்பட்ட மாற்று வழியான, கொறணை - கொட்டாவ புதிய வீதியினை நிர்மாணிப்பதற்குத் தற்போது உள்ள புகையிரத முறைமையினை இணைத்தல் மிகவும்

பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொட்டாவ புதியப் போக்குவரத்து கேந்திர நிலையமாகக் கொள்ளப்பட்டுள்ளது. நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அதிவேக மார்க்கம் இனிவருங்காலங்களில் கொட்டாவ நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் இடம்பெறவுள்ள எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை கேந்திர நிலையமாகக் கொண்டு, இவ் உத்தேசிக்கப்பட்ட வீதி தற்போது கொறணை பாணந்துறைக்குப் பதிலாக கொறணை கொட்டாவவாக மாற்றப்பட்டுள்ளது. மொரட்டுவ பலக்லைக்கழத்தினூடாக இடம்பெற்றுள்ள சாத்தியக்கூறு ஆய்வு நடவடிக்கைகளுக்கான இறுதி அறிக்கை இற்றை வரையில் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா. 6 மில்லியனுக்கு கருத்திட்டத்தின் கீழ் எந்தவொரு செலவும் இடம்பெறவில்லை.

### 6.5 மதவாச்சி – திருகோணமலை புதிய புகையிரத வீதி

சுமார் 80 கிலோமீற்றர் வரையான நீளத்தைக் கொண்ட இக்கருத்திட்டத்தின் செய்முறைக் கற்கை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித வள அபிவிருத்தி நிறுவனத்தினால் இடம்பெற்றுவருவதுடன் இறுதி அறிக்கை மிக விரைவில் பெற்றுக்கொள்ளப்படும். இவ் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா. 10 மில்லியனில் ரூபா. 6.75 மில்லியன் இதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

### 6.6 வெல்லவாய – பதுளை புதிய புகையிரத வீதி

பதுளையிலிருந்து மொனராகலையூடாக வெல்லவாய வரையான புதிய புகையிரத வீதியொன்றை நிர்மாணித்தலின் கீழ் அம்பிலிபிட்டியவிலிருந்து மொனராகலை, வெல்லவாய, அம்பாறை ஊடாக மட்டக்களப்பு வரைக்கும் கதிர்காமத்திலிருந்து இவ் வீதியினை தொடுக்கக்கூடியவாறு வேறு ஒரு மாரக்கமாக புகையிரத வீதி முறைமைக்கு முன் ஆய்வினை மேற்கொள்வதற்கு பொறியியலாளர் பணி தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு ஒப்படைப்பதற்கு அமைச்சு கொள்முதல் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அது தொடர்பான உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டுக்கு ரூபா. 10 மில்லியன் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் உரிய பணிக்காக முற்பணமாக ரூபா. 12 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 6.7 திருகோணமலை – புத்தளம் புதிய புகையிரத வீதி

திருகோணமலையிலிருந்து மகவ ஊடாக கொழும்புக்குப் புகையிரத வீதியொன்று உள்ளதால், மகவவிலிருந்து புத்தளம் வரையான புதிய புகையிரத வீதியொன்றை நிர்மாணித்தல் போதுமானதாகும். ஆதலால் மகவவிலிருந்து புத்தளம் வரையான புதிய புகையிரத வீதியொன்றுக்கான முன் சாத்தியக்கூறு ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அமைச்சின் புகையிரதத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் இடம்பெற்றுள்ளது. ஆதலால் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு மீதியாகியுள்ளது.

## 7. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை.

### 7.1. அறிமுகம்

1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்தச் சட்டமூலத்தினூடாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது பிரதான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் மற்றும் வீதிப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட அமைப்புக்களிலுருந்து 17 அங்கத்தவர்களையும் உள்ளடக்குகின்றது

மோட்டார் வாகனச் சட்டமூலத்தின் 213 அ பிரிவில் இச்சபையின் கடமைப் பொறுப்பு காட்டப்பட்டுள்ளதுடன் 213 ஆ பிரிவினூடாக ''வீதிப் பாதுகாப்பு நிதியம்'' ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்திற்கு பாதுகாப்புச் சபை தமது மூன்றாவது கட்சியினரின் காப்புறுதித் தவணைக் கட்டணங்களிலிருந்து 1 % ஐ பங்களிப்புச் செய்கின்றது.

தொலைநோக்கு – ''அனைவருக்கும் பாதுகாப்பான வீதிகள்''

குறிக்கோள் – ''வீதி விபத்துக்களற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்குதல்''

வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் கடமைப் பொறுப்புக்கள்.

- அடையாளங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குட்பட்ட நபர்களுக்கு இழப்பீடுகள் வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான கருத்திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் செயற்பாட்டினை மேம்படுத்தல்.
- அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினுள் வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புபட்ட பணியினை ஒருங்கிணைத்தல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பணிகளுக்கு நிதிசார் உதவிகள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
- வீதிப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- சமமான சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பினை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக அறிவினைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- இணைந்த விடயங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், புலனாய்வினை நடாத்துதல் மற்றும் களத்துறை ஆய்வினை முன்னெடுத்தல்.
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தரவுக் கழஞ்சியமொன்றை முன்னெடுத்துச் செல்லல்.
- வீதிப் பாதுகாப்பு விடயத்திற்குரித்தான புத்தகங்களுடன்கூடிய நூலகமொன்றை ஆரம்பித்தல்.

### 7.2. இனங்காணப்படாத வாகனங்களினால் விபத்துக்களுக்கான நபர்களுக்கான இழப்பீட்டு பிரேரணை முறைமை

மோட்டார் வாகனச் சட்டமூலத்தின் 213 அ பிரிவினூடாக காட்டப்பட்டுள்ள வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் பிரதான பணியான இந்த இழப்பீட்டுப் பிரேரணை முறைமையினூடாக 2013.01.01 ஆந் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற அடையாளங்காணப்படாத வாகன விபத்துக்களில் காயம் ஏற்பட்ட நபர் ஒருவருக்கு ரூபா. 75000/- பணமும், மரணித்த நபரொருவரின் சட்டரீதியான தங்கிவாழ்கின்ற ஒருவருக்கு ரூபா. 1000,000/- பணமும் இழப்பீடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் இப்பிரேரணை முறைமை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் படிவங்களினுள் 77 விண்ணப்பப் படிவங்களுக்கு 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்குச் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா. 32,95,000/- ஆகும்

### 7.3 வீதிப் பாதுகாப்புக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்

- தென் மாகாணத்தின் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்காக மாகாண வீதிப் பாதுகாப்புத் திட்டத்தினைத் தயாரிக்கின்ற வேலைத்திட்டம் 2013.07.12 ஆந் திகதி நடாத்தப்பட்டது.
- சாரதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுகின்ற 03 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் அந்நிறுவனத்திற் கடமையாற்றுகின்ற வாகன மற்றும் றக் சாரதிகள் 150 பேர்களுக்கு சாரதி விபத்துக்களைக் குறைப்பது தொடர்பான போதனை நடாத்தப்பட்டுள்ளது.
- அழுத்கம 600 முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு சாரதி விபத்துக்களைக் குறைப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.
- தென் மாகாண அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டமொன்று 150 அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றுகையுடன் நடாத்தப்பட்டுள்ளது.
- பாணந்துறை வீதிப் பாதுகாப்புக் குழு உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுகின்ற நிகழ்ச்சித் திட்டமொன்று 50 அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றுகையுடன் நடாத்தப்பட்டுள்ளது.
- களுத்துறை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் 50 அரச உத்தியோகத்தர்கள் மற்றும் 480 கிராம உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.
- மாவட்டச் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மற்றும் 65 அரச உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

### 7.4 வீதிப் பாதுகாப்பு ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான சட்ட வரைவு

வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை அதிகாரத்துடன்கூடிய வீதிப் பாதுகாப்பு ஆணைக்குழுவாக நியமித்தல் சட்ட வரைவு மீளவும் திருத்தத்துடன் இற்றை வரை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

# II ஆவது பிரிவு

## அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடு

# 1. இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

## 1.1 அறிமுகம்

தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் பங்களிப்பு 2013 ஆண்டும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் பிரயாணிகள் போக்கவரத்துக்களிலிருந்து 6% மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்துக்களிலிருந்து 2% பங்களிப்பாக கிடைக்கப்பெற்றுள்ளன.

### தொலைநோக்கு

தென் ஆசியாவிலேயே மிகவும் விளைதிறனான புகையிரதப் போக்குவரத்து வழங்குனர்களாக ஆக்குதல்.

### பணி

பிரயாணிகள் மற்றும் சரக்குப்பொருட்கள் போக்குவரத்திற்கான பாதுகாப்பு, நம்பிக்கை, குறிப்பிட்ட நேரத்திற்கு ஓட்டுதல், சிக்கனமானதும் மற்றும் விளைதிறனானதுமான புகையிரதப் போக்குவரத்துச் சேவையொன்றை வழங்குதல்.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டில் சிறந்த முன்னேற்றமொன்றை நிறைவு செய்வதில் இலங்கைப் புகையிரதச் சேவை வெற்றி கண்டுள்ளது. இம் மேம்பாட்டுக்காக புதிய புகையிரத பவர் செட்டுக்களை அறிமுகஞ் செய்தல், புதிய புகையிரத சேவைகளை அறிமுகஞ் செய்தல் போன்ற விடயங்கள் உதவப்பட்டுள்ளன. மேலும் புகையிரத அணியின் விளைதிறன், செயலியக்கப் பிரிவிலுள்ள சிறந்த வளர்ச்சி போன்ற விடயங்களும் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இதனூடாகத் தற்போது புகையிரதத்தில் பயணஞ் செய்வதற்குப் படையெடுப்பவர்களின் வீதம் அதிகரிரத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளதுடன், புகையிரத வருமானமும் உயர்ந்துள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் ரூபா. 4851.86 மில்லியனாக இருந்த மொத்த வருமானம் 2013 ஆம் ஆண்டில் 5423.29 வரை அதிகரித்துள்ளது. மேலும் புகையிரத விபத்துக்கள் குறைந்திருத்தல், புகையிரதக் குறுக்கு வீதிகளின் விபத்துக்கள் குறைந்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு புகையிரதம் சேவைக்கு ஈடுபடுத்தும் சதவீதம் அதிகரித்தல் போன்ற சிறப்புக்கள் பிரிவுகளின் சிறந்த மேம்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன.

பின்வரும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் வீதி வலைப்பின்னல் மற்றும் சைகை முறைமையின் பேணல் நடவடிக்கைகள் இக்கால வரையறையினுள் இடம்பெற்றுள்ளன.

- மதவாச்சியிலிருந்து மடு வரையான புகையிரத வீதி மீளவும் நிர்மாணிக்கப்பட்டு பிரயாணிகள் மற்றும் சரக்குப் பொருட்கள் போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளதுடன் அவ்வீதியின் செட்டிக்குளம், நேரியகுளம், மடு வீதி போன்ற புகையிரத நிலையங்களை அமைத்து நிறைவு செய்தல்.
- கொழும்பு கொட்டுவ - கண்டி சொகுசு புதிய இன்டசிற்றி புகையிரதச் சேவையினை அறிமுகஞ் செய்தல் மற்றும் மீரிகம மற்றும் கொழும்பு - கொட்டுவவுக்கு இடையே புதிய புகையிரத சேவையொன்றை அறிமுகஞ் செய்தல்.
- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள எஸ் 12 புதிய பவர் செட்டுக்களை களனி கங்கை வீதியின் புகையிரதச் சேவையில் பயன்படுத்துதல்.

- புதிய வசதிகளுடன் அமைக்கப்பட்ட எஸ் 12 புதிய பவர் செட்டுக்களை உடரட்ட வீதியின் பதுளை வரை சேவையிலிடுபடுத்தப்படுகின்ற பொடி மனிக்கே மற்றும் உடரட்ட மனிக்கே புகையிரதங்களுக்குப் பயன்படுத்துதல்.

- பிரதான வீதியின் பதுளை வரை எஸ் 12 புதிய பவர் செட்டுக்களைப் பயன்படுத்தி குளிரூட்டப்பட்ட புகையிதத்தினை அறிமுகஞ் செய்தல்.

- ஆற்றோரப் புகையிரத வீதியினை புதுப்பித்து எஸ் 11 புதிய பவர் செட்டுக்களைப் பயன்படுத்தி மேலும் புகையிரதங்களைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தல்.

- புகையிரத நிலையங்களில் பிரயாணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல்.

  - ➢ தன்னிச்சையாக இயங்கும் எந்திரங்களை புகையிரத நிலையங்களில் அமைத்தல்.
  - ➢ மருதானை மற்றும் கொழும்பு கொட்டுவ புகையிரத நிலையங்களில் CC TV பொருத்துவது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கையினை எடுத்தல்.
  - ➢ பிரயாணிகள் ஓய்வு அறை வசதிகள் மற்றும் மலசலகூட சேவைகளை மேம்படுத்துதல்.
  - ➢ கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக ஆசனங்களை முன்பதிவு செய்து கொள்ளுவதை மேலும் விரிவுபடுத்துதல்.
  - ➢ டிஜிரல் நேர சூசிகைகளை புகையிரத நிலையங்களில் ஸ்தாபித்தல்.

- பிரயாணிகள் வசதிகளை மேலும் மேம்படுத்துவதற்காக மில்கோ, கோபிறைட் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து புகையிரத நிலையப் பகுதிகளில் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேலும் அமுற்படுத்துதல்.

- அழிக்கப்பட்ட யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தினை இலங்கை வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மீளவும் நிர்மாணிக்கும் பணிகளை அமுற்படுத்துதல்.

- பயணச்சீட்டு இல்லாமற் புகையிரதத்தில் பயணஞ்செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து தண்டப் பணங்களை அறவிடும் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல்.

- அரச தலைவர்களுக்கான மகாநாட்டினை ஒட்டி கொழும்பு கொட்டுவ மற்றும் மருதானை புகையிரத நிலையங்களைப் புதுப்பித்தல்.

வடக்குப் புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணிக்கும் கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான சாராம்சம் பின்வருமாறு.

| கருத்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட செலவு (அ.டொ.மி.) | எதிர்பார்க்கப்பட்ட பௌதிக இலக்கு (தூரம் கி.மீ) | முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | நிதி | பௌதிகம் |
| மதவாச்சியிலிருந்து மடு வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 81.30 | 43 | Completed | |
| மடுவிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 149.50 | 63 | 75% | 65% |
| ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 185.49 | 91 | 90% | 97% |
| பளையிலிருந்து காங் கேசன்துறை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல். | 149.34 | 56 | 41% | 40% |
| வடக்குப் புகையிரத வீதியின் சமிக்ஞை மற்றும் மின் விளக்குக் காட்டி முறைமையினை மீளவும் அமைத்தல். | 86.50 | 313 | 50% | 43% |

## 1.2 செயலியக்கக் காட்டி

| காட்டி | 2012 மில்லியன் | 2013 மில்லியன் |
|---|---|---|
| புகையிரதம் கி.மீ. (மில்லியன்) | 10.36 | 10.49 |
| பிரயாணிகள் புகையிரதம் கி.மீ. | 9.35 | 9.93 |
| சரக்குப் பொருட்கள் புகையிரதம் கி.மீ. | 0.52 | 0.56 |
| பிரயாணிகளின் எண்ணிக்கை | 106.04 | 118.71 |
| பிரயாணிகள் கி.மீ. | 5039.44 | 6257.37 |
| சரக்குப்பொருட்கள் கி.மீ. | 143.41 | 132.45 |
| சரக்குப்பொருட்களின் தொன் (மில்லியன்) | 2.06 | 1.91 |

## 1.3 உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு

### 1.3.1 புகையிரத வீதி

இலங்கையின் மொத்தப் புகையிரத வீதி 1640 கி.மீ மாத்திரமேயாவதுடன் இற்றை வரையில் 1447 கி.மீ. புகையிரத ஓட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட வடக்கு மற்றும் தலை மன்னார் புகையிரத வீதிகள் இற்றை வரையில் மீளவும் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் தலை மன்னார் புகையிரத வீதியின் மதவாச்சியிலிருந்து மடு வரையும் வடக்குப் புகையிரத வீதியின் கிளிநொச்சி வரையும் இற்றை வரையில் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் புகையிரத ஓட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நிரந்தர வீதிகள் வலைப்பின்னலின் சைகை முறைமை மற்றும் புகையிரத அணியினைப் பேணுவதும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மேலும் கொழும்பு - இராகம மூன்றாவது வீதி ஓட்டப் பணிகளுக்காகத்

திறக்கப்படுதல் மற்றும் ஜா எல - சீதுவ வீதியினை இரண்டு வீதியாக்குதல் இவ்வருடத்தில் இடம்பெற்றுள்ளது. கண்டி - பேராதனை வீதியினை இரண்டு புகையிரத வீதியாக்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தெற்கு களுத்துறையிலிருந்து தெற்குப் பயாகல வரையான புகையிரத வீதியினை இரண்டு வீதியாக்குதல் தொடர்பாக வீதித் திட்டப் பணி நிறைவடைந்துள்ளது.

1. **மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

இந்தியாவின் கடன் உதவிகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இக்கருத்திட்டம் 02 ஆவது கட்டத்தின் கீழ் இடம்பெற்றுவருவதுடன் மதவாச்சியிலிருந்து மடு வரை 43 கி.மீ. புகையிரத வீதி மீளவும் நிர்மாணிக்கப்பட்டு ஓட்டப் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மடுவிலிருந்து தலைமன்னார் வரையான நிர்மாணப் பணிகளும் இடம்பெறுகின்றன. இது தொடர்பாக மதிப்பிடப்பட்ட பணம் அ.டொ.மி. 231 ஆகும்.

2. **ஓமந்தையிலிருந்து பளை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

வடக்குப் புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இந்த மதிப்பிடப்பட்ட முழுச்செலவுகள் அ.டொ.மி. 185.49 மாத்திரமே ஆகும். இவ்வீதி இற்றை வரையில் கிளிநொச்சி வரை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

3. **பளையிலிருந்து காங்கேசன்துறை வரையான புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணித்தல்.**

இப்புகையிரத வீதியின் தூரம் 56 கி.மீ. என்பதுடன் மதிப்பிடப்பட்ட நிதி அ. டொ.மி. 149.34 ஆகும். இற்றை வரையில் இதன் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவருவதுடன் 2014 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று சேவைக்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

4. **அனுராதபுரத்திலிருந்து வடக்குப் புகையிரத வீதி மற்றும் தலை மன்னார் புகையிரத வீதி தொடர்பாக புதிய சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமையொன்றை அமைத்தல்.**

வடக்குப் புகையிரத வீதியினை மீளவும் நிர்மாணிக்கும் போது அதற்குக் தேவையான மின் தொடர்பாடல் முறைமையினை அமைத்தல் இக்கருத்திட்டத்தின் கீழே இடம்பெறுகின்றது. இது தொடர்பாக மதிப்பிடப்பட்ட செலவு அ. டொ.மி. 86.5 ஆகும்.

### 1.3.2 சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை

புகையிரத சேவையினை விளைதிறனாக்கும்போது சைகை மற்றும் மின் தொடர்பாடல் முறைமை பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. சைகைக் குறைபாட்டினை மிகவும் குறைந்த மட்டத்தில் முன்னெடுத்துச் சென்று புகையிரத சேவையினை சரியானவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு இது மிகவும் முக்கியமானது. இதன் கீழே பல அபிவிருத்திப் பணிகள் அமுற்படுத்தப்பட்டு வருவதுடன் வடக்குப் புகையிரத வீதி தொடர்பாக மின்விளக்கு சைகை முறையினை அமைத்தல், தற்போதுள்ள சைகைக் குறைபாடுகளைப் பேணல், பாதுகாப்பான புகையிரத குறுக்கு வீதியினை அமைத்தல் போன்றன அவைகளிற் சில.

### 1.3.3 புகையிரத அணி

தற்போதுள்ள புகையிரத அணிக்கு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய பவர் செட் 13 ஒன்றாக்கப்பட்டுள்ளதுடன் அவ்வனைத்துப் பவர் செட்டுக்கள் ஓட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பிரயாணிகள் பெட்டி 15 மற்றும் 03 என்ஜின்கள் பழுதுபார்க்கப்பட்டு புகையிரத அணிக்குச் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் சேவைக்கான புகையிரத என்ஜின்

சாதாரணமாக அன்றாட பாவனை 60 மட்ட வேகத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு முடியும்.

சீனாவின் புதிய பவர் செட் 13 இறக்குமதி செய்யபப்பட்ட அதேவேளை அது வரையில் குறுந்தூர ஓட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட பவர் செட்டுக்களில் தூரப்பயணச் சேவைகள் தொடர்பான ஓட்டத்திற்கும் ஒன்றாக்கப்பட்டுள்ளது. விசேடமாக மேல்நாட்டுப் புகையிரத வீதிக்கு இந்தப் பவர் செட்டுக்களில் ஓட்டுதல் ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை அவ்வீதியின் புகையிரத ஓட்டம் உயர்ந்து சென்றது. அது மேல்நாட்டுப் புகையிரத வீதியின் பதுளை மற்றும் கண்டி வரையான புகையிரத ஓட்டத்தின் சிறப்பாக மேம்படுத்துவதற்கு உதவியாகின. இதன் கீழ் அவ்வீதிக்கு முழுமையாக குளிரூட்டப்பட்ட புகையிரதத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமாக இருந்தது. அதே போல அலுவலகப் புகையிரதத்திற்கு இரண்டு பவர் செட்டுக்களை வழங்குவதனூடாக பிரயாணிகளுக்கு மிகவும் வசதியான புகையிரத சேவையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 1.4 நிதி முன்னேற்றம்

| வருமானம் / செலவு (ரூ.மி.) | 2012 | 2013 |
|---|---|---|
| சாதாரண நுளைவுச் சீட்டு | 2806.01 | 3557.21 |
| பருவகால நுளைவுச் சீட்டு | 793.44 | 930.44 |
| பொதிகள் மற்றும் கடிதங்கள் | 119.62 | 134.5 |
| பொருட்கள் மற்றும் கால்நடை வளங்கள் | 461.84 | 412.5 |
| பிற | 670.93 | 388.64 |
| மொத்தம் | 4851.87 | 5423.29 |
| செலவு | | |
| மீண்டுவரும் செலவினம் (ரூ.மி.) | 8647.65 | 10586.47 |
| மூலதனச் செலவினம் (ரூ.மி) | 30077.21 | 20248.99 |
| மொத்தச் செலவு | 38724.86 | 30835.46 |

# 2. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

## 2.1 பின்னணி

இலங்கையினுள் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு 1928 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டமூலத்தினூடாக மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் ஒரு திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது.

### தொலைநோக்கு

"சிறந்த முறையில் மோட்டார் வாகனங்களைக் கண்காணித்து மக்களின் உயர் பாராட்டுதலுக்கு இலக்காகுதல்."

### எமது பணி

"ஊக்கப்படுத்தப்பட்ட சேவையினை அனைவருடைய ஒன்றிணைந்த முயற்சி மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மோட்டார் வாகனங்களுக்கான சட்டமூலம் மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குகளைச் சிறந்தாக அமுற்படுத்தி உயர் மக்கள் பாராட்டுதலுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுதல்."

## 2.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பணிகள்.

1. சேவையிலீடுபடுத்தக்கூடிய மோட்டார் வாகனங்களைப் புதிதாகப் பதிவு செய்தல்.
2. வாகன உரிமைகளை ஒப்படைத்தலைப் பதிவு செய்தல்.
3. சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் சேவை.
4. மோட்டார் வாகனம் தொடர்பான தொழில்நுட்பச் சேவை.
5. புகை வெளியேறும் நிலைமையினை முகாமைப்படுத்தும் முறைமை (சூழற் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டு)
6. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான பணிகள்.

## 2.3 செயற்பாடு (2013 ஜனவரி – திசம்பர் 31)

திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற பணிகளின் முன்னேற்றத்தினை 3 கட்டங்களாகப் பின்வருமாறு மீளாய்வு செய்ய முடியும்.

1. வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் தந்திரோபாயத்தினை அமுற்படுத்துவதன் முன்னேற்றம்.
2. மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.
3. பொதுமக்கள் சேவைகளில் எண்ணிக்கை சார் முன்னேற்றம்.

திணைக்களத்தின் செயற்பாட்டினை மிகவும் செயற்திறன் மற்றும் விளைதிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளைத் திணைக்களத்தினூடாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**1. வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் பணிகளை அமுற்படுத்துவதன் முன்னேற்றம்.**

இணைந்த திட்டத்தினை ஒத்து அமுற்படுத்தப்பட்டு வருகின்ற வருடாந்த அமுற்படுத்துகைத் திட்டத்தினூடாக உள்ளீர்க்கப்பட்ட செயற்பாடுகளை நோக்காகக் கொண்ட காலத்தினுள்

அமுற்படுத்துதல் அத்தியாவசியமாவதுடன் 2013 ஆம் ஆண்டினுள் பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள் இற்றை வரையில் வெற்றிகரமாக அமுற்படுத்தப்பட்டு வருகின்றன

I. **வர்ணங்கள் சட்ட முறைமை**

இலங்கையினுள் பொதுப் பிரயாணிகள் போக்குவரத்து இடம்பெற்று வருகின்ற வாகனங்கள் மற்றும் பாடசாலை சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள் அனைத்தும் சரியான வர்ணத்தின் பிரகாரம் 2013 ஜனவரி 31 ஆந் திகதியிலிருந்து அமுற்படுத்தக்கூடியவாறு வர்ண நிறங்களைப் பூசுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பொது பிரயாணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பேரூந்துக்கள் சிவப்பு வர்ண நிறங்களாகவும் பிரத்தியேகப் போக்குவரத்துச் சபைக்கு ஈடுபடுத்தப்படுகின்ற பேரூந்துக்கள் மேக நீல நிறங்களாகவும் வர்ணம் அடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைப் போக்குவரத்துச் சேவைக்கு ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் மஞ்சள் நிற வர்ணம் அடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

II. Dash Board System

திணைக்களத்தின் தகவல்களை ஒலி ஒளி முறைமைகளில் திணைக்களச் சூழலினுள் காட்டுதல் பொதுமக்களுக்கு முக்கியத்துவம் மிக்கதாக விளங்கும். மற்றும் முகாமைத்துவத்திற்கு முக்கியமான தகவல்களை திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் தொடர்பான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துதல் இதனூடாக இடம்பெறுகின்றது.

(உதாரணம், அன்றாட செயற்பாட்டுத் தரவுகளைப் பரீட்சித்தல் மற்றும் கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் படிவங்களின் முன்னேற்றத்தினைப் பரீட்சித்தல்)

III. **சாரதிகள் வலுவுஸீட்டல் புள்ளிகள் முறைமையினை அமுற்படுத்துதல்.**

இலங்கையினுள் சேவையிலீடுபடுத்தப்படுகின்ற வாகன முறைமை மற்றும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்படுவதுடன் அப்பிரச்சினைகளைக் குறைப்பது தொடர்பாகவும் மற்றும் ஒழுக்காற்றுடன் சாரதிகளை உருவாக்குவதற்காகவும் இந்தச் சாரதிகள் வலுவூட்டல் புள்ளிகள் முறைமையினை அமுற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டமூலத்தின் பிரகாரம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

சாரதிகள் வலுவூட்டல் புள்ளிகள் முறைமை நாடுபூராவும் அமுற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் விதிக்கப்பட்ட கருத்திட்டம் கொழும்பு நகரத்தினைக் கேந்திரமாகக் கொண்டு அமுற்படுத்தப்படுகின்றது. இற்றை வரையில்,

- குடிபோதையில் ஏற்படும் வாகன விபத்துக்கள்
- வீதி வாகன விபத்துக்கள்

போன்ற இரண்டு விதமான பிழைகளை அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இற்றை வரையில் அறிக்கையிடப்பட்ட தகவல்களில் 15,677 மாத்திரம் இனங்காணப்பட்டுள்ளதுடன் 2013 ஒக்டோபர் மாதம் வரை இனங்காணப்பட்டுள்ள தகவல்கள் இதன் கீழ் உரித்தாகும்.

IV. **ஈ – மோட்டார் கருத்திட்டம்.**

ICTA அறிக்கையின் பிரகாரம் அமுற்படுத்தப்பட்டு வருகின்ற இக்கருத்திட்டம் இற்றை வரையில் பல கட்டங்களாக அமுற்படுத்தப்படு வருவதுடன் BOT முறைமையினை அடிப்படையாகக் கொண்டு இக்கருத்திட்டம் அமுற்படுத்தப்பட்டு வருகின்றது.

திணைக்களத்தினுள் சேவைகளை வழங்கும்போது பாவிக்கும் ஆவணக் கோவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், உரிய திணைக்களத்திற்குப் பணிகளை இலகுபடுத்துவதற்காகவும் இக்கருத்திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு எண்ணியுள்ளதுடன் இதனூடாகத் திணைக்கள ஊழியர்களின் பல விடயங்கள் உள்ளடக்கப்படும். திணைக்களத்தினுள் பாவிக்கப்பட்டு வருகின்ற ஆவணக் கோவைகளை ஸ்கான் செய்து கணனிமயப்படுத்துதல் இதனூடாக இடம்பெற்று வருவதுடன் திணைக்களத்திற்குத் தேவைப்படுகின்ற ஆவணக் கோவைகளின் பாதுகாப்பு இதனூடாக உறுதி செய்யப்படும். இதனூடாக ஆவணக் கோவைகளைக் கழஞ்சியப்படுத்துவதற்குத் தேவைப்படும் இடத்தினைக் குறைத்துக் கொள்ள முடியும்.

2. **பாதீட்டு ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமுற்படுத்தப்பட்டு வருகின்ற மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்.**

திணைக்களத்தினுள் மூலதனக் கருத்திட்டங்கள் பல தொகுதிகளாக அமுற்படுத்தப்பட்டு வருவதுடன் இதன் கீழ் பிரதானமாக

- மோட்டார் வாகன பிரதான அலுவலகம் மற்றும் வேரகர உப அலுவலகத்தின் நிர்மாணிப்பு பணிகள்.
- மாவட்டச் செயலகங்களின் நிர்மாணிப்புப் பணிகள்.
- இயந்திரோபாயங்களைக் கொள்வனவு செய்தல்.
- மனித வள முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

பிரதான அலுவலகத்தினுள் பல நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டினுள் அமுற்படுத்தப்பட்டு வருகின்றது. 2013 ஆரம்பத்தில் முச்சக்கர வண்டிகள் புதிதாகப் பதிவு செய்கின்ற கிளை மற்றும் உணவு புசிக்கும் அறையின் பணி நிறைவு பெற்றுள்ளதுடன் இற்றை வரையில் பொதுமக்கள் கூடத்தினை புதுப்பிக்கும் பணிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் புதிய பதிவு செய்கின்ற பிரிவுக்காக களஞ்சியப் பகுதியில் மோட்டார் கார் ஒப்படைக்கும் பிரிவினுள் புதுப்பித்தல் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

| | செயற்பாடு | தொகை –2013 |
|---|---|---|
| 1 | சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் எழுத்து மூலப் பரீட்சைகளை நடாத்துதல் | 145,268 |
| 2 | சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் செய்முறைப் பரீட்சைகளை நடாத்துதல். | 450,495 |
| 3 | இலக்கத் தகடுகளை வழங்குதல் (கொழும்பு) | 433,633 |
| 4 | இலக்கத் தகடுகளை வழங்குதல் (வெளி மாகாணங்கள்) | |
| 5 | கராஜ், புதிய சந்தை நிறுவனங்களைப் பதிவு செய்தல் | 67 |
| 6 | கராஜ், புதிய சந்தை நிறுவனங்களைப் புதுப்பித்தல். | 721 |
| 7 | சாரதிகள் பாடசாலைகளைப் பரீட்சித்தல். | 39 |
| 8 | படிவங்களை வழங்குதல் | 254 |
| 9 | ஊஆவு, ஸசி இலக்கத்தினை வழங்குதல் | 10 |
| 10 | ரேலர் ஸசி இலக்கத்தினை வழங்குதல் | 2,534 |
| 11 | சுங்க ஏலவிற்பனை வாகனங்களுக்கு ஊஆவு, ஸசி இலக்கத்தினை வழங்குதல். | 103 |
| 12 | மோட்டார் சைக்கிள்களைப் பரீட்சித்தல். | 2,414 |
| 13 | புதிய மோட்டார் சைக்கிள்களைப் பரீட்சித்தல். | 171,863 |
| 14 | பாரமான வாகனங்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் | 12,867 |
| 15 | அடையாளச் சான்றிதழினை வழங்குதல். | 2,167 |
| 16 | தடுத்தல் கட்டளைகளை வழங்குதல் | 2,267 |
| 17 | தடுத்தல் கட்டளைகளை அகற்றுதல் | 2,092 |
| 18 | வாகன விபத்துக்களைப் பரீட்சித்தல் | 5,040 |
| 19 | விசேட கடமைகளுக்கு பங்குகொள்ளல் | 427 |

அதற்கு மேலாக திணைக்களத்தினுள் வழங்கப்படுகின்ற சேவைகளை விரிவுபடுத்தி நாடுபூராவும் வழங்குவதற்காக மாவட்ட அலுவலகங்கள் நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதில் கட்டங்களாக அனுராதபுரம், கேகாலை, மட்டக்களப்பு, களுத்துறை, புத்தளம், கம்பகா, குருனாகல் மற்றும் நுவரெலியா போன்ற மாவட்ட அலுவலகங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டினுள் யாழ் மாவட்ட அலுவலகத்தினை நிர்மாணிக்கும் பணிகள் மற்றும் அனுராதபுர இலக்கத் தகடுகளை கழஞ்சியப்படுத்துவதற்கான கட்டிடம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு மேலாக களுத்துறை, பொலன்னறுவை போன்ற மாவட்ட அலுவலகங்களின் பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன.

### 3. மக்கள் சேவைகளின் எண்ணிக்கை சார் முன்னேற்றம்

- **மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழில்நுட்பச் சேவை**

- **புகை வெளியேற்றப் பரீட்சிப்பு பணிகளை முகாமை செய்தல்.**

பதிவு செய்யப்பட்டு வருகின்ற வாகனங்களின் அதிக எண்ணிக்கையின் காரணமாக நகர மற்றும் பாதி நகரப் பிரதேசங்களினுள் உருவாகின்ற புகைகளைக் குறைப்பதற்குத் திணைக்களத்தினால் அமுற்படுத்தப்பட்டு வருகின்ற புகை வெளியேற்றத்தினை முகாமை செய்கின்ற வேலைத்திட்டங்கள் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளன. அதன் கீழ் நடமாடும் புகை வெளியேற்றப் பரீட்சிப்பு அலகொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டங்களிலும் இவ்வாறான பரீட்சிப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து

நாட்டையும் உள்ளடக்குமாறு வட மாகாணத்தினுள் 2013 யூலை 01 ஆந் திகதியன்று புகை வெளியேற்றப் பரீட்சிப்பு அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் கிலிங்கோ லங்கா பிரத்தியேக அமைப்பின் கீழ் 17 நிலையங்களும், லாவ் இக்கோ சிறீ பிரத்தியேக அமைப்பின் கீழ் 09 நிலையங்களும் யாழ் மாவட்டத்தினுள் அமுற்படுத்தப்பட்டு வருகின்றன. புகை வெளியேற்ற முகாமை வேலைத்திட்டங்களின் கீழ் இற்றை வரையில் பரீட்சிக்கப்பட்டு வருகின்ற வாகனத்தின் பதிவுகள் மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிராது நாட்டினுள் எந்தவொரு நிலையங்களிலும் உரிய பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் உண்மையான வருமானங்கள்.

(ஜனவரி- திசம்பர்)

**வருமானம்**

| வருமான விபரம்/வருமானத் தலைப்பு | 2013.12.31 ஆந் திகதியன்று மதிப்பிடப்பட்ட வருமானம் ரூ.மி. | 2013.12.31 அன்று உண்மையான வருமானம் ரூ.மி. |
|---|---|---|
| சொகுசு மோட்டார் வாகன வாடகை | 1,350.00 | 1,146.01 |
| மோட்டார் வாகனங்களை விற்பனை | 42.03 | 55.61 |
| மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டமூலத்தின் கீழ் குத்தகைகள் அறவிடப்பட்டு வருகின்ற கட்டணங்கள். | 6,800.00 | 6,530.61 |
| இமா மொத்மாசைபசபய்ய மொத்த வருமானம் | **8,192.03** | **7,732.24** |

அனுசரணை - மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

திணைக்களம் உழைத்துள்ள அனைத்து வருமானங்களையும் கவனத்திற்கொள்ளும் போது மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டமூலத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட குத்தகையினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 84% உயர் வருமானமொன்றைக் கொண்டு வந்துள்ளதுடன், மோட்டார் வாகனங்களை விற்பனை செய்தல் அடிப்படையில் வசூலிக்கப்பட்டுள்ள குத்தகைகளின் முக்கியத்துவம் அனைத்துக் குத்தகைப் பெறுமதிகளின் 1% போன்ற கீழான பெறுமதியொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**செலவு**

| செலவு விபரம்∴ செலவுத் தலைப்பு | 2013.12.31 அன்றைய திகதி மதிப்பிடப்பட்ட செலவு ரூ.மி | 2013.12.31 அன்றைய திகதி மதிப்பிடப்பட்ட செலவு ரூ.மி. |
|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 1,448.30 | 1,266.37 |
| மூலதனச்செலவு | 1,050.80 | 928.06 |
| மொத்தச் செலவு | **2,499.10** | **2,194.44** |

நிதி அனுசரணை - மோட்டார் வாகனப் போக்குவத்துத் திணைக்களம்

# 3. இலங்கைப் போக்குவரத்துச் சபை

இலங்கையின் பயணிகள் போக்குவரத்துச் சேவையினுள் அரச பிரிவின் பங்களிப்பினை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கின்ற நிறுவனமான இலங்கைப் போக்குவரத்துச் சபை வருடத்தின் அனைத்துத் தினங்களிலும் பொதுமக்களுக்குச் சேவையினை வழங்கி வருகின்ற அரச நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

**தொலைநோக்கு**

வலயத்தின் சிறந்த பயணிகள் போக்குவரத்து

**பணி**

பொதுமக்களுக்குப் பாதுகாப்பு, நம்பிக்கை, மிகவும் இலகுவான வீதிப் பயணிகள் சேவையொன்றை நியாயமான கட்டண முறைமையொன்றின் கீழ் சேவைக்கென தம்மை அர்ப்பணஞ் செய்துள்ள வினைதிறனான அலுவலகக் குழாமொன்றினூடாக நிறுவனத்தின் அனைத்து வளங்களையும் உச்சப் பயன்பாட்டுக்கு கொண்டு வந்து பொருளாதாரம் சார் அடிப்படையில் நடுநிலைமையாக முன்னெடுத்துச் செல்லல்.

## 3.1 சமூகப் பயன்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பங்களிப்பு

- **விடியற்காலை மற்றும் இரவு நடு நிசி வரை இறுதிப் பயணங்களை மேற்கொள்ளுதல்.**

இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்குமாறு விடியற்காலை மற்றும் இரவு நடு நிசி இறுதிப் பயணங்கள் சேவைகளை வழங்குவதனூடாக நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற ஊழியப் படையின் போக்குவரத்துத் தேவைப்பாடுகளை வழங்குவதில் ஈடுபட்டவர்கள் இச் சேவையினூடாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இலாபத்தினை எதிர்பாராது சேவையினை வழங்குகின்றனர். ஆனாலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சமூகப் பொறுப்பொன்றாகக் கருதியே இச்சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

- **கிராமிய சேவைகள் பேரூந்துக்கள்**

கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு நகரத்தினை ஒன்றிணைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக வழங்கப்படுகின்ற பங்களிப்பினைக் காட்டி, வர்த்தக ரீதியற்ற சேவையினூடாக ஏற்படுகின்ற நட்ட நிலைமைகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளாது இச்சேவையினை வழங்குவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

- **பாடசாலை சேவைகளுள்ள பேரூந்துக்கள்**

இலங்கையினூடாக ஈடு செய்யகின்ற செலவினங்களினுள் நாட்டின் நாளைய நாளுக்காக சமூகப் பயன்களை உருவாக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் பிரயாணிகள் நெருக்கடி அதிகம் மற்றும் இலாபத்தினை உழைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இல்லாது போயிருப்பினும் எம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட வாகன அணியினூடாக அதிக வாய்ப்பினை எதிர்காலப் பரம்பரைக்குத் தாமதிக்காது பாடசாலைக்குக் கொண்டு செல்லல் தேசியப் பணிக்குத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

- **தேசிய வைபவங்களில் சேவையிலீடுபடுத்தப்படுகின்ற பேரூந்துக்கள்**

சிங்கள, தமிழ் புதுவருட வைபவம், வெசக் மற்றும் பொசன் வைபவம், கண்டி மற்றும் கதிர்காமத் திருவிழாக்கள், வருடாந்த மடு தேவாலயம் மற்றும் சிவனொலிபாத மலைக்கு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற இலங்கைப் போக்குவரத்துச் சேவையினூடாக சமூகப பராமரிப்புச் சேவையொன்றாக இது அமுற்படுத்தப்படுகின்றது.

- **பருவ கால நுழைவுச் சீட்டுக்கள்**

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முதியோர்களுக்கென ஒதுக்கி பல்வேறு மட்டங்களினூடாக போக்குவரத்துத் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை கொண்டு வந்த செயற்பாட்டினூடாக நாட்டிலுள்ள பிரயாணிகளுக்கு பொருளாதார அடிப்படையில் சலுகை வழங்குதல் இடம்பெறுகின்றன.

## 3.2 பேரூந்துக்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்றம்.

- மகிந்த சிந்தனைக் கொள்கைக்கு அமைய அங்கவீனமுற்ற நபர்கள் பயணங்களை மேற்கொள்வதற்கான வசதிகளுடன் பேரூந்துக்களைச் சேவையிலீடுபடுத்துவதற்கு ஒன்றிணைத்தல் தொடர்பான ஆரம்ப நடவடிக்கை ஒன்று (டுழற குடழழச) என்ற அடிப்படையில் 13 பேரூந்துக்கள் கொழும்பு நகரத்தினுள் 2012 ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 2013 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக சேவையிலீடுபடுத்தப்படும்.

**அங்கவீனமுற்ற நபர்கள் பயணங்களை மேற்கொள்வதற்கு வசதிகளுடன் கொழும்பினைச் சென்றடைகின்ற வீதிகளை உள்ளடக்குமாறு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள சொகுசு பேரூந்துக்கள்**

- ➢ பம்பலபிட்டி - கடவத்தை
- ➢ மொரட்டுவ - கொழும்பு
- ➢ கோமாகம - கொழும்பு
- ➢ பாணந்துறை - கொழும்பு
- ➢ நீர்கொழும்பு - கொழும்பு - பாணந்துறை
- ➢ கிரிபத்கொட - மொரட்டுவ
- ➢ மகரகம- கொழும்பு

- இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக தெற்கு அதி வேக வீதி மற்றும் ஏனைய தூரச் சேவைகளுக்கு 25 விசேட சொகுசு பேரூந்துக்களைப் பயன்படுத்தி பிரயாணிகள் போக்குவரத்துத் தேவைப்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 05 பேரூந்துக்கள் (Low Floor) அங்கவீனமுற்றவர்களுக்குப் பயண வசதிகளுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

- மும்மொழிகளிலும் இலத்திரனியல் டிஜிரல் பெயர்ப் பலகைகளைப் பொருத்துவதனூடாக அரச மொழிக் கொள்கையினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை செயற்பட்டு வருகின்றது. அதன் கீழ் தூரப்பயணச் சேவைகள் 50 பேரூந்துக்கள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- மேல் மாகாணத்திலுள்ள அனைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபை பேரூந்துக்களுக்கு இலத்திரனியல் நுழைவுச்சீட்டு இயந்திரங்களை பாவனைக்கு ஈடுபடுத்துதல் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது. மேலும் தெற்கு, வடமேல்

மற்றும் சப்பிரகமுவ போன்ற பிரதேசங்களிலும் இச்சேவையினை அமுற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை 2014 ஆம் ஆண்டில் முழுமையாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டவாறு இலத்திரனியல் அட்டைகளை உபயோகித்து நுழைவுச் சீட்டுக்களை வழங்குதல் ஆரம்ப நடவடிக்கையாக மேல் மாகாணத்திலுள்ள 03 பாடசாலை மாணவர்களுக்கு அவ்வாறான நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டினுள் கொழும்பு மாவட்டத்தினுள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாகத் தெற்கு அதிவேக வீதியினுள் விசேட சொகுசுப் பேரூந்துக்களைப் பயன்படுத்தி பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலைமைக்கு மாறாக மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது பின்வரும் பிரதேசங்களை உள்ளடக்குமாறு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**சொகுசுப் பேரூந்துக்களைப் பயன்படுத்தி தெற்கு அதி வேக வீதியினூடாக இடம்பெறுகின்ற சேவைகள் தொடர்பான விபரங்கள்.**

- ➢ மகரகம - காலி
- ➢ அல்பிட்டிய - மகரகம
- ➢ கொழும்பு - மத்தளை விமான நிலையம்
- ➢ பிட்டகொட்டுவ - காலி (இராஜகிரிய, பத்தரமுல்லை ஊடாக)
- ➢ மத்துகம - கொழும்பு
- ➢ குருனாகல் - கட்டுநாயக்க ஊடாக கொழும்பு
- ➢ கட்டுநாயக்க - கொழும்பு
- ➢ நீர்கொழும்பு - கொழும்பு

- கட்டுநாக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையத்திற்கிடையே பேரூந்துக்கள் சேவையினை அமுற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், பிட்டகொட்டுவ மற்றும் மத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையத்திற்கிடையே சொகுசு பேரூந்துகள் சேவையொன்றை அமுற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சிசு சரிய பேரூந்துக்கள் சேவையின் கீழ் 619 பேரூந்துக்கள் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் நாடுபூராவும் அதன் கருத்திடம் பின்வருமாறு.

| சிசு சரிய பாடசாலைகள் பேருந்துக்கள் சேவைகள் கருத்திட்டம் | | | |
|---|---|---|---|
| பிரதேசம் | தற்போது சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துக்களின் எண்ணிக்கை | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட பேருந்துக்கள் | சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள மொத்தப் பேருந்துக்களின் எண்ணிக்கை. |
| கொழும்பு | 103 | 43 | 146 |
| கம்பகா | 55 | 24 | 79 |
| களுத்துறை | 33 | 14 | 47 |
| நுவரெலியா | 4 | 12 | 16 |
| கண்டி | 26 | 20 | 46 |
| கிழக்கு | 35 | 5 | 40 |
| றுகுண | 78 | 23 | 101 |
| சப்பிரகமுவ | 101 | 22 | 123 |
| ஊவா | 51 | 9 | 60 |
| வடக்கு | 25 | 0 | 25 |
| ரஜரட்ட | 69 | 12 | 81 |
| வடமேல் | 39 | 25 | 64 |
| **மொத்தம்** | **619** | **209** | **828** |

- 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஜனவரியிலிருந்து யூன் வரையான வீதிகள் பதிவேட்டு வருமானத்தினை கவனத்திற் கொள்ளும்போது 2013 ஆம் ஆணடில் வளர்ச்சியொன்றைக் காண முடியும். ஆனாலும் 2012 மற்றும் 2013 ஜனவரி, பெப்ரவரி மாதங்களினுள் எரிபொருள் விலைகள் மற்றும் கட்டண மறுசீரமைப்புக்கள் இடம்பெற்றுள்ளதால் அம்மாதங்கள் தவிர்ந்த ஏனைய மாதங்களைக் கவனத்திற் கொள்ளும்போது ஏறக்குறைய 5% மாத்திரமே வீதிகள் பதிவேட்டு வருமானத்தில் வளர்ச்சியொன்றைக் காணக்கூடியதாக உள்ளது.

| 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வீதிகள் பதிவேட்டு வருமானங்கள் | | |
|---|---|---|
| மாதம் | 2012 ரூ.மி. | 2013 ரூ.மி. |
| ஜனவரி | 1,360 | 1,589 |
| பெப்ரவரி | 1,434 | 1,456 |
| மார்ச் | 1,428 | 1,627 |
| ஏப்ரல் | 1,505 | 1,581 |
| மே | 1,486 | 1,561 |
| யூன் | 1,577 | 1,563 |
| யூலை | 1,613 | 1,661 |
| ஆகஸ்டு | 1,650 | 1,732 |
| செப்ரெம்பர் | 1,541 | 1,594 |
| ஒக்டோபர் | 1,558 | 1,646 |
| நவம்பர் | 1,478 | 1,617 |
| திசம்பர் | 1,562 | 1,803 |
| **மொத்தம்** | **18,191** | **19,430** |

### 3.3 இலங்கைப் பேருந்துக்கள் அணி

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 7,000 ஊர்திகள் அணி காணப்பட்டும் தற்போது அதில் பாவிக்கக்கூடிய நிலைமையில் 5.600 ஊர்திகள் அணியே உள்ளன. ஊர்திகள் அணியினுள் தற்போது 10 வருடங்கள் வயதினைக் கொண்ட ஊர்திகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. அதன் பிரகாரம் இற்றை வரையில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சேவைக்கு ஈடுபடுத்துவதற்குப் பொருத்தமான பேருந்துக்கள் அணியின் அமைப்பு பின்வருமாறு.

| விளைதிறனான பேருந்துக்கள் அணி (2013. 12. 31 அன்று) | | | | |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி | பேருந்துக்களின் எண்ணிக்கை | | மொத்த வாகன அணி | மொத்த வாகன அணி சதவீதத்தில் |
| | சேவையிலுள்ள | சேவையிலில்லாத | | |
| 02 வருடத்தினை விடக் குறைவு | 581 | 22 | 603 | 8% |
| 02-05 வருடத்திற்கிடையில் | 255 | 26 | 281 | 4% |
| 05-10 வருடத்திற்கிடையில் | 1,677 | 337 | 2,014 | 28% |
| 10-15 வருடத்திற்கிடையில் | 1,381 | 1,105 | 2,486 | 35% |
| 15 வருடத்திற்குக் கூட | 912 | 847 | 1,759 | 25% |
| மொத்தம் | 4,806 | 2,337 | 7,143 | |

- 2013 ஆம் ஆண்டின்போது திறைசேரியின் நிதியத்தினூடாக 281 புதிய பேருந்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2013 டிசம்பர் வரையில் இப் பேருந்துக்களில் 261 கொள்வனவு செய்யப்பட்டு ஊர்திகள் அணிக்குச் சேர்க்கப்பட்டுள்ளன. இற்றை வரையில் அப் பேருந்துகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயற் பணிகளுக்கு பங்களிப்பு நல்கி வருகின்றன. அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை ஊர்திகள் அணிக்கு ஒன்று சேர்க்கப்பட்ட பேருந்துக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| 2011 ஆண்டிலிருந்து ஊர்திகள் அணிக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட புதிய பேருந்துக்கள். | | | |
|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 திசம்பர் |
| திறைசேரியின் நிதியத்தினூடாக ஊர்திகள் அணிக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட சாதாரண பேருந்துக்கள். | 10 | 120 | 261 |
| குத்தகை அடிப்படையின் கீழ் ஊர்திகள் அணிக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட சாதாரண பேருந்துக்கள். | 162 | 146 | 16 |
| குத்தகை அடிப்படையின் கீழ் ஊர்திகள் அணிக்கு ஒன்றுசேர்க்கப்பட்ட சொகுசுப் பேருந்துக்கள். | - | 12 | 24 |
| மொத்தம் | 172 | 278 | 301 |

- இலங்கைப் போக்குவரத்துச் சபையினூடாக தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொகுசுப் பேருந்துக்களின் எண்ணிக்கை 17 ஆகும். தற்போது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயலியக்கப் பணிகளுக்கு இப் பேருந்துக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

- இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பேருந்துக்கள் நீண்டகாலச் சேவைக்கு அனுப்புவதினுள் அவ்வூர்திகளின் என்ஜின்கள், கியர் பெட்டி, முழுமையான பேருந்தின் அமைப்பு மீண்டும் பழுதுபார்க்க வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. 2013 ஆம் ஆண்டின்போது பேருந்துக்களுக்காகப் பொருத்தப்பட்டுள்ள உதிரிப்பாகங்கள் மற்றும் சேவையிலிருந்து அகற்றப்பட்ட பேருந்துக்களைப் பழுதுபார்த்தல் தொடர்பான தகவல்ககள் பின்வருமாறு.

| 2013 உற்பத்தியின் அளவு | | |
|---|---|---|
| | 2012 வருடம் | 2013 திசம்பர் இறுதியாகும்போது |
| என்ஜின் | 725 | 820 |
| கியர் பெட்டி | 328 | 377 |
| பேரூந்தின் முழுமையான அமைப்பு | 208 | 217 |
| எரிபொருள் குழாய்ப்பொறி | 332 | 188 |
| எரிபொருள் தெளிப்பான் (fuel spray) | 1,380 | 804 |

- பேரூந்துக்களைப் பேணுவதற்குத் தேவையான என்ஜின்கள், கியர் பெட்டி, பேரூந்தின் முழுமையான அமைப்பினைப் பழுதுபார்த்தலுக்கு தேவைப்படுகின்ற மேலதிகப் பாகங்கள் குத்தகைச் சலுகை அடிப்படையில் பெறுகைச் சபையின் அனுமதியுடன் விநியோகக்காரர்களினூடாக தேவைப்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டு கொள்முதல் தொடர்பான சரியான முறைமைகளைத் தயாரித்தல் கடந்த கால அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளதுடன் இற்றை வரை அச் செயற்பாடுகளினூடாக மேலதிகப் பாகங்ககளுக்கான செலவினை எந்தவொரு மட்டத்திலும் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 2012 ஆம் ஆண்டில் சேவைக்காகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பேரூந்துக்களின் எண்ணிக்கை பொதுவாக 4,694 என்பதுடன் 2013 ஆம் ஆண்டின் திசம்பர் வரும் வரை அது சாதாரணமாக 4,721 மட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து சேவைக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் அளவு சாதாரண மட்டத்திற்கு மேலாக முன்னெடுத்துச் செல்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கொடுக்கல், வாங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூ டாக அந்நிலைமையினை வெற்றி பெறச் செய்வதற்கு இயலுமை உள்ளது.

- 2012 ஆம் ஆண்டில் நாளொன்றுக்குச் சேவைகளை வழங்கிய பேரூந்துக்களின் எண்ணிக்கை சாதாரணமாக 4,314 என்பதுடன் 2013 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கையினை 4,371 ஆக அதிகரிப்பதற்கு முடிந்துள்ளது.

- 2013 ஆம் ஆண்டில் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள சாதாரணமான கிலோமீற்றர்களின் எண்ணிக்கை மாதமொன்றுக்கு 28 மில்லியனாவதுடன் அந்நிலைமையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தற்போதுள்ள வாகன அணியினூடாக ஆகக்கூடிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 3.4 இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மனித வளம்

2005 ஆம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினை மீளவும் ஸ்தாபித்த போது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பாரிய ஊழியர்கள் குழாம் காணப்பட்டதுடன், அவ் ஊழியர்கள் குழாம் எண்ணிக்கை ரீதியில் 38,952 ஆகும். இதனை இலங்கைப் போக்குவரத்துச் சபை ஈடு செய்ய முடியாத நிலைமையில் இருந்ததால் புதிய ஆட்சேர்ப்புக்களை முடிந்த வரை குறைப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு இயலுமை இருந்தது. அதன் பிரகாரம் கடந்த காலங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் நிலவரம் பின்வருமாறு.

| 2005 இல் இருந்து ஊழியர்கள் அமைப்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | பிரதேச செயலகங்கள் மற்றும் டிப்போக்கள் | பிரதேசத்தின் வேலைத் தளங்கள் | சாரதிகள் பயிற்சிப் பாடசாலைகள் | மத்திய பேரூந்து அலுவலகம் | இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பிரதான அலுவலகம் | மொத்தம் |
| 2005.10.19 | வெவ்வேறாக புள்ளி விபரங்கள் இல்லாமை | | | | | 38,952 |
| 2006.12.31 | 35,252 | 1,121 | 55 | 370 | 834 | 37,632 |
| 2007.12.31 | 34,986 | 964 | 72 | 301 | 826 | 37,149 |
| 2008.12.31 | 33,821 | 917 | 80 | 284 | 1,028 | 36,130 |
| 2009.12.31 | 33,134 | 827 | 85 | 286 | 1,033 | 35,365 |
| 2010.12.31 | 32,601 | 782 | 84 | 263 | 1,042 | 34,772 |
| 2011.12.31 | 32,135 | 775 | 58 | 268 | 1,027 | 34,263 |
| 2012.12.31 | 31,761 | 757 | 57 | 273 | 958 | 33,806 |
| 2013.12.31 | 30,590 | 722 | 57 | 288 | 973 | 32,630 |

- 2013 ஜனவரியிலிருந்து திசம்பர் வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 1905 ஆகும். அதில் 44% மானவர்கள் சாரதிகள் மற்றும் 46% மானவர்கள் நடத்துநர்கள் என ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் மொத்த ஆட்சேர்ப்புக்களில் 90% சேவையினைச் சரியானவாறு முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் ஆட்சேர்ப்பாகும்.

- இவ் ஊழியர்கள் குழாமினை இவ்வாறு முன்னெடுத்துச் செல்லாது இவ் ஊழியப்படையினை முடியுமான வரை விளைதிறனாகப் பயன்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் திசம்பர் இறுதி வரையில் நடாத்தப்பட்ட மொத்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். அதனூடாக மிகவும் முக்கியமான பிரிவுகளிலுள்ள ஊழியர்கள் பயிற்சிக்கு இலக்கிடப்பட்டிருந்தனர். அவ்வாறு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு.

  - ➢ பாதுகாப்பாகவும் மற்றும் செலவுகளைக் குறைக்கும் வகையிலும் சாரதிகளைப் பயிற்சியளிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்
  - ➢ சிரேஸ்ட டிப்போ பரிசோதகர்களினூடாக டிப்போக்களின் சாரதிகள், நடத்துனர்களுக்குப் பயிற்சியளித்தல் தொடர்பாக வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்
  - ➢ ஒழுக்காற்று நடவடிக்கைகள் உத்தியோகத்தர்களைப் பயிற்சியளித்தல் தொடர்பான வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்.
  - ➢ செயற்பாட்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பயிற்சி வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்.
  - ➢ சிறந்த பணிச் சூழலினை ஏற்படுத்துதல் பயிற்சி வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்
  - ➢ HRIS தரவுகளை உள்ளடக்கும் பயிற்சி வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்.
  - ➢ விளைதிறனாக நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்தும் வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்.

➢ போதைப்பொருள் மீட்சி வேலைத்திட்டமொன்றை நடாத்துதல்.

➢ எரிபொருள் குழாய்ப் பொறி, வாகன மின்சாரம் மற்றும் இயந்திர வல்லுனர் தொழில்நுட்பவியலாளர்களினை வெளி செய்முறைப் பயிற்சிகளுக்கு ஈடுபடுத்துதல் (லங்கா ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்)

- கடந்த சில மாதங்களினுள் இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் ஊழியர்களின் எண்ணிக்கை 33,856 க்கும் 33,181 க்கும் இடையில் வேறுபாட்டில் வைத்து நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு எம்மால் முடிந்துள்ளது.

- இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான பிரச்சினையாகத் தற்போது காணப்படுகின்ற பணிக்கொடைக் கொடுப்பனவுகள் இற்றை வரையில் முடியுமான வரையில் கொடுப்பனவுகளை மேற்கொண்டு அப்பிரச்சினையினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இற்றை வரையில் பின்வருமாறு அவற்றின் பணக் கொடுப்பனவுகள் இடம்பெற்றுள்ளன.

| இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | | | |
|---|---|---|---|
| | விபரம் | ஊழியர்கள் | ரூ.மி. |
| 1 | 2012 மே 1 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுகள் | 230 | 122 |
| 2 | 2012 மே 1 ஆந் திகதிக்குப் பின்னரான கொடுப்பனவுகள் | 204 | 108 |
| 3 | நீதிமன்ற வழக்கு 2855 கொடுப்பனவுகள் | 2,855 | 748 |
| 4 | 2013 ஏப்ரல் 11 கொடுப்பனவுகள் | 175 | 81 |
| 5 | முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை. | 4,560 | 2,091 |
| ஊக விபரம் | | | |
| 6 | முறைப்பாடு செய்யாத எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு | 3,125 | 1,150 |
| | **மொத்தம்** | 9.914 | 3.716 |
| 2005.10.19 ஆந் திகதிக்குப் பின்னர் ஓய்வு கிடைக்கப் பெற்ற ஊழியர்களுக்கு இப்பணிக்கொடைக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ரூபா. 3.716 மில்லியனைச் செலவு செய்ய வேண்டியுள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. | | | |

## 3.5 இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

இற்றை வரை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் பழுதுபார்க்க வேண்டிய நிலைமைக்கு வந்துள்ளன. எனினும் தற்போது காணப்படுகின்ற நிதிப் பற்றாக்குறையினைக் கைவிட்டு இச் செயற்பாடுகள் இடம்பெறுதல் வேண்டுமென்பதால் ஏற்படும் தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதான அலுவலகம் மற்றும் ஏனைய அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் கடந்த காலங்களினுள் பின்வரும் பேணச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

➢ இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான அலுவலகத்தின், சாலிகா கட்டிடத்தினதும் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான ஏனைய சேவைகளை வழங்குகின்ற இடங்களின் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் இடம்பெறுதல்.

➢ பிரதேச அலுவலகங்கள், பிரதேச வேலைத்தளங்கள் மற்றும் டிப்போக்களில் உள்ள பாதுகாப்பு வேலிகள் மற்றும் சுவர்களைப் பராமரித்தல் செயற்பாடுகள் மற்றும் பழுதுபார்த்தல்.

- ➢ இரண்டாவது கட்டத்தின் கீழ் கதிர்காமம் ஓய்வு விடுதி மண்டபத்தினைப் புதுப்பிக்கின்ற செயற்பாடுகள் இடம்பெறுதல். தற்போது இச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

- ➢ சுற்றுலா விடுதிகள் மற்றும் ஓய்வு விடுதிகளின் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் ஆரம்ப கட்டமாக அனுராதபுர சுற்றுலா விடுதி புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- தேசத்திற்கு மகுடம் கண்காட்சியினை ஒட்டி அம்பாறை டிப்போவினைப் புதுப்பித்தல் செயற்பாடு இடம்பெற்றுள்ளதுடன் இவ்வருடத்தின் தேசத்திற்கு மகுடம் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கண்காட்சி மையம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நாமம் மக்களுக்கிடையே செல்லுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ஊழியர்கள் சம்பளத்தினைத் தயாரிக்கும்போது சொவ்ட் வெயாரினை அமுற்படுத்துதல் இடம்பெற்று வருகின்றது. இற்றை வரை உடகமுல்ல மற்றும் இரத்மலானை போன்ற டிப்போக்களின் சம்பளங்களைத் தயாரித்தல் இந்த சொவ்ட் வெயாரினைப் பாவித்து இடம்பெற்று வருவகின்றது. ஏனைய டிப்போக்களிலும் இது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

- மொத்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் சொவ்ட் வெயார் இற்றை வரை பிரதான அலுவலகம் மற்றும் களுத்துறைப் பிரதேசத்தில் பாவிக்கப்பட்டு வருவதுடன், கண்டி. ரஜரட்டை, நுவரெலியா போன்ற பிரதேச அலுவலகங்கள் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டுள்ளன.

- எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஸ்தாபிக்கின்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையம் மீளவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், கொக்கல எரிபொருள் நிரப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு உரித்தான பேரூந்துத் தரிப்பிடங்களின் பேணற் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அதேவேளை வட மேல் பிரதேசத்தினுள் மகவ பேரூந்துத் தரிப்பிடத்தினைப் புதுப்பிக்கின்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- முல்லைத்தீவு டிப்போவினை மீளவும் நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல்.

- சாரதிகள் பாடசாலைகளினை மேம்படுத்தி வருமானத்தினைப் பெருக்குவதனை இலக்காகக் கொண்டு சாரதிகள் பாடசாலைகளினைப் புதுப்பித்தலின் கீழ் ஆரம்பமாக அங்குலான சாரதிகள் பயிற்சிப் பாடசாலையினைப் புதுப்பித்தல் மற்றும் வதிவிடத்தினை நிர்மாணித்தல்.

# 4. தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகம்

## 4.1 அறிமுகம்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகச் சட்டமூலத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது. நிறுவகத்தின் அடிப்படை நோக்குகளை நிறைவேற்றுவதற்காக பிரதான அலுவலகம் மற்றும் இருபது (20) கிளை அலுவலகங்கள் நாடுபூராவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இலங்கையினுள் உள்ள பார வாகனங்கள் அதேபோல இலகு வாகனங்களின் சாரதிகளின் தேகாரோக்கிய நிலைமை தொடர்பாக உயர் மற்றும் சிறந்த மருத்துவப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு, அதன் பிரகாரம் மருத்துவச் சான்றிதழினை வழங்குவதற்கு பிரதான அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களினூடாக தேவையான சேவைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன.

#### தொலைநோக்கு

ஒவ்வொரு சக்கரத்திற்குப் பின்னால் தேகாரோக்கியமான சாரதி ஒருவர் இருத்தல்.

#### பணி

இலங்கையினுள் போக்குவரத்து மருத்துவக் களத்துறையின் முன்னுரிமையான அனைத்துச் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை எதிர்பார்ப்பவர்களுக்கு ஆன்மீகம் சார் சிறந்த மருத்துவப் பரிசோனையினை மேற்கொண்டு உடல் மற்றும் உள ஆரோக்கியம் தொடர்பான சான்று வழங்குதல்.

## 4.2 நோக்குகள்

i. அனைத்துச் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களைக் கோருபவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைப் பரீட்சித்துப் பார்த்தல்.

ii. வழங்கப்பட்டு வருகின்ற மருத்துவச் சான்றிதழின் சிறப்பியல்பு மற்றும் பாதுகாப்பு உப முறைமைகளை மேம்படுத்துதல்.

iii. சிறந்த மனித வள முகாமைத்துவத்தினூடாக சேவையின் சிறப்பியல்பினை எட்டுதல்.

## 4.3 நிறுவனத்தின் பணிகள்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் சட்டமூலத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் பணிகள் பின்வருமாறு.

(அ) பாரமான வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான மோட்டார் வாகனங்களினை ஓட்டுகின்ற அல்லது செலுத்துகின்ற சாரதிகளுக்கு மற்றும் செலுத்துனர்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குதல்.

(ஆ) பாரமான வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான மோட்டார் வாகனங்களின் சாரதிகள் மற்றும் செலுத்துனர்களைப் பரீட்சித்து அந்தச் சாரதிகள் மற்றும் செலுத்துனர்களுக்கு உடல் மற்றும் உள தகைமை தொடர்பான சான்றிதழினைப் பெற்றுக் கொடுத்தல்.

(இ) பாரமான வாகனங்களை உள்ளடக்கிய அனைத்து வகையான வாகனங்களின் சாரதிகள் மற்றும் செலுத்துனர்கள் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் தகைமை மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான பரிந்துரைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

(ஈ) யாருக்கோ அல்லது மோட்டார் வாகனங்களுக்கோ இடம்பெற்ற உரிய விபத்துக்கள் தொடர்பான மருத்துவச் சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(உ) அனைத்து அறிக்கைகளுக்கும் உரித்தான மோட்டார் வாகனங்கள், உடல் மற்றும் உளப் பொருத்தப்பாடு மற்றும் திறனாளரினால் மாத்திரம் செலுத்தப்பட்டு வருவதாக அல்லது ஓட்டப்பட்டு வருவதாக நிறுவனத்தினால் அல்லது ஏனைய பிரதிநிதியினை விசாரித்து செயற்படுவதற்கு பொறுப்பு நிற்றல்.

(ஊ) நிறுவனத்தின் செயற்பாட்டினை நிறைவேற்றுதல் பணிக்கு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்குப் பொருத்தமான வைத்திய உத்தியோகத்தர்களின் சபையொன்றை நியமித்தல்.

(எ) தொழில் தன்மை மற்றும் தொழில் விபத்துக்கள் தொடர்பாக மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

(ஏ) உரிய அமுற்படுத்தலினை விதிக்கின்றவர்களினால் ஏற்றுக்கொள்ள வேண்டிய அல்லது அமுற்படுத்த வேண்டிய போக்குவரத்து வைத்தியச் செயற்பாடுகளுக்கு நியமங்களைத் தயாரித்தலும் மற்றும் வரையறையினை விதித்தலும்.

## 4.4 தற்போதைய செயற்பாடு.

- 2013 ஆம் ஆண்டின் இற்றை வரை பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களாக இரண்டு தவிசாளர்கள் செயற்பட்டு வருவதுடன், பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டினுள் இந்நிறுவனத்தின் பிரதான பணிகளான சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை எதிர்பார்ப்பவர்களுக்கு மருத்துவப் பரிசோதனையினை மேற்கொண்டு, மருத்துவச் சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

**2013.12.31 ஆந் திகதி வரை.**

| மருத்துவப் பரிசோனை இடம்பெற்ற தொகுதியினர் | இடம்பெற்றுள்ள மொத்த மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | ஆரோக்கிய நிலைமைகளின் அடிப்படையில் மருத்துவப் பரிசோதனையில் சித்தியெய்யாத சாரதிகள் மற்றும் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை விண்ணப் பித்துள்ளவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்யாத சாரதிகள் மற்றும் சாரதிகள் அனுமதிப் பத்திரங்களை விண்ணப் பித்துள்ளவர்களின் சதவீதம் |
|---|---|---|---|
| பிரதான அலுவலகம் | 73850 | 3625 | 4.91% |
| கண்டி | 25180 | 3193 | 12.68% |
| காலி | 15397 | 2611 | 16.96% |
| குருனாகல் | 35074 | 2319 | 6.61% |
| அனுராதபுரம் | 17447 | 2699 | 15.47% |
| கம்பாந்தோட்டை | 13778 | 578 | 4.20% |
| இரத்தினபுரி | 14465 | 360 | 2.49% |
| பதுளை | 10873 | 664 | 6.11% |

| | | | |
|---|---|---|---|
| மொனராகலை | 7685 | 538 | 7.00% |
| அம்பாறை | 10582 | 423 | 4.00% |
| மட்டக்களப்பு | 11864 | 619 | 5.22% |
| வெரகர | 40818 | 4986 | 12.22% |
| மாத்தறை | 11468 | 1664 | 14.51% |
| வவுனியா | 6545 | 277 | 4.23% |
| மன்னார் | 2107 | 32 | 1.52% |
| திருகோணமலை | 7932 | 42 | 0.53% |
| கிளிநொச்சி | 4215 | 77 | 1.83% |
| யாழ்ப்பாணம் | 10800 | 564 | 5.22% |
| கம்பகா | 36588 | 3654 | 9.99% |
| களுத்துறை | 13917 | 528 | 3.79% |
| மாத்தளை | 1211 | 140 | 11.56% |
| | **371796** | **29593** | **7.96%** |

க.வே. - மேற்குறிப்பிட்ட மொத்த மருத்துவப் பரிசோதனைகள் தொடர்பாக பாரமான வாகனங்கள், இலகுவான வாகனங்கள் மற்றும் வீதி அனுமதிப் பத்திரங்களுக்காக இடம்பெற்றுள்ள மருத்துவப் பரிசோதனைகள் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

- அப்படியாயின் பரிசோதனைகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் ஒவ்வொரு 100 பேரிலும் 7-9 க்கு இடையிலான எண்ணிக்கையினர் ஆரோக்கிய நிலைமைகளின் அடிப்படையில் வாகனங்களை ஓட்டுவதற்கு பொருத்தமற்றவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

- மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டமூலத்தின் திருத்தத்துடன், பாரமான வாகனங்களுக்கான சாரதிகள் அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 3 வருடங்களிலிருந்து 4 வருடங்களாக நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதே போல பாரமான வாகனங்கள் அனுமதிப் பத்திரங்களைப் புதிதாகப் பெற்றுக்கொள்ளுவதற்கு இலகுவான வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்று 2 வருட காலம் முடிவடைந்ததும் விண்ணப்பிக்கலாகாது. அவ்வாறான காரணங்களினால் எமது நிறுவனத்திற்கு மருத்துவப் பரிசோதனைகளுக்கு முன்வைக்கப்படுகின்ற எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது முதலாவது காலாண்டில் குறைவொன்றைக் காணக் கூடியதாக உள்ளது.

இலகுவான வாகனங்களுக்காகப் பாவிக்கப்பட்டுள்ள MT31A என்ற படிவத்திற்குப் பதிலாக எமது நிறுவனத்தில் அச்சிடப்பட்டுள்ள பாதுகாப்பு உப முறைமைகளுடன் இலகு வாகனங்கள் மருத்துவப் படிவத்தினை பாவிப்பதற்கும் கேகாலை, பொலன்னறுவை, புத்தளம், முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை போன்ற மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கு எமது நிறுவனத்தினால் மாத்திரம் மருத்துவ அறிக்கைகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பிரதான அலுவலகத்தினை உள்ளடக்கிய அனைத்துக் கிளைகள் தொடர்பாக சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருகின்ற பயனாளிகளின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்து வருகின்றது.

| 2013 | இலகு வாகனங்களுக்கான மருத்துவப் பரிசோனைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 2908 |
| பெப்ரவரி | 2556 |
| மார்ச் | 3089 |
| ஏப்ரல் | 13285 |
| மே | 19196 |
| யூன் | 23304 |
| யூலை | 29507 |
| ஆகஸ்டு | 31215 |
| செப்ரெம்பர் | 35902 |
| ஒக்டோபர் | 34189 |
| நவம்பர் | 29313 |
| திசம்பர் | 31468 |

- தேசியப் போக்குவரத்து வைத்திய நிறுவகத்திற்கு பொலிஸ் திணைக்களம் மற்றும் நீதிமன்றத்தினூடாக முன்வைக்கப்பட்டுள்ள சேவைநாடியினரின் சதவீதத்தின் பிரகாரம் 7% - 9% த்திற்கு இடையிலான சதவீதம் வாகனங்கள் ஓட்டுவதற்கு பொருத்தமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருக்கவில்லை என அடையாளங் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆரோக்கிய அடிப்படையில் பொருத்தமற்ற சாரதிகள் வாகனங்களைச் செலுத்தாதிருத்தல் உறுதிப்படுத்துதல் தொடர்பாக எம்மினால் செயலாற்றப்பட்டு வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு பங்காற்றப்பட்டுள்ளது.

| மாதம் | பொலிஸ் திணைக்களங்கள் மற்றும் நீதிமன்றங்களினால் மருத்துவப் பரிசோதனைக்கு முன்வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்யாதவர்களின் எண்ணிக்கை | சித்தியெய்யாத சேவை நாடியினர்களின் சதவீதம் |
|---|---|---|---|
| ஜனவரி | 186 | 10 | 5.37% |
| பெப்ரவரி | 167 | 15 | 8.98% |
| மார்ச் | 172 | 17 | 9.88% |
| ஏப்ரல் | 196 | 13 | 6.63% |
| மே | 237 | 21 | 8.86% |
| யூன் | 227 | 17 | 7.48% |
| யூலை | 266 | 21 | 7.89% |
| ஆகஸ்டு | 202 | 16 | 7.92% |
| செப்ரெம்பர் | 237 | 12 | 5.06% |
| ஒக்டோபர் | 215 | 21 | 9.77% |
| நவம்பர் | 216 | 14 | 6.48% |
| திசம்பர் | 167 | 12 | 7.19% |
| **மொத்தம்** | **2494** | **199** | **7.98%** |

- போலி நபர்கள் மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்றுவதைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டு மருத்துவ அறிக்கைக்கு புகைப்படமொன்றை உள்ளடக்குதல் தொடர்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததால் அச்செயற்பாடுகளை

முறைமையாக முன்னெடுப்பதற்கு புகைப்பட நிலையமொன்று நிறுவனத்திற்குள்ளே ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் மருத்துவப் பரிசோதனைக்கு போலி நபர்கள் தோற்றுவதை குறைப்பதற்கு மருத்துவ அறிக்கை தொடர்பான புகைப்படத்தினை நிறுவனத்தினுள் நிறுவப்பட்டுள்ள புகைப்பட நிலையத்தில் எடுப்பதைக் கட்டாயமாக்கி கிளை அலுவலகங்களிலும் புகைப்பட நிலையத்தினை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதனூடாக சேவை நாடியினர்களுக்கு இலகுவானதும் மற்றும் விரைவானதுமான சேவையினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும் நிறுவனத்தின் வருமானங்களை மேம்படுத்துவதற்கும் முடியுமாக உள்ளது. இற்றை வரையில் பின்வரும் கிளை அலுவலகங்களில் புகைப்பட நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

| கிளை அலுவலகம் | ஆரம்பிக்கப்பட்டுள்ள தினம் |
|---|---|
| குருனாகல் | 2012.02.22 |
| கம்பாந்தோட்டை | 2012.06.18 |
| இரத்தினபுரி | 2012.06.19 |
| கண்டி | 2012.07.02 |
| கம்பகா | 2012.09.22 |
| அனுராதபுரம் | 2012.11.17 |
| வேரகர | 2013.01.16 |
| காலி | 2013.01.19 |
| பதுளை | 2013.02.18 |
| மாத்தறை | 2013.04.29 |

- மாத்தளை மாவட்டத்திலுள்ள சேவை நாடியினர்களுக்கு விரைவானதும் மற்றும் வினைத்திறனானதுமான சேவையொன்றை வழங்குவதற்கு 2013.11.22 ஆந் திகதி மாத்தளைக் கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சேவை நாடியினர்களுக்கு வினைத்திறான சேவையொன்றை வழங்குவதற்கு வேரகர போக்குவரத்துக் கிராமத்தினுள் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தின் செயற்பாடுகளை மு.ப. 7.30 ஆரம்பிப்பதற்கும், கம்பகா கிளை அலுவலகத்தின் செயற்பாடுகளை மு.ப.7.00 மணிக்கு ஆரம்பிப்பதற்கும் மற்றும் குருனாகல் கிளை அலுவலகத்தின் செயற்பாடுகளை மு.ப. 8.00 மணிக்கு ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் வேரகர கிளையில் அதிகளவிலான சேவை நாடியினர்களுக்கு சேவையினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு அதில் தற்போது பெற்றுக் கொடுக்கப்பட்ட இடத்தினளவினை அதிகரிப்பதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் வேரகர கிளை முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கட்டிடத்தினை ரூபா. 5.05 மில்லியனைச் செலவு செய்து மேலும் மேம்படுத்துவது இடம்பெற்று வருகின்றது.

- அநேகமான பிரதேச அலுவலகங்கள் அரச கட்டிடங்களில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனுராதபுரக் கிளை அரச கட்டிடத்திலும், வேரகர கிளை வேரகரக் கிராமத்தின் கட்டிடத்திலும், கம்பாந்தோட்டை, வவுனியா, மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் களுத்துறை மாவட்டச் செயலகங்களின் கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஏனைய கிளை அலுவலகங்கள் தனிப்பட்டவர்களின் வாடகைக் கட்டிடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாகவும் அரச கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. மேலும் கண்டிக் கிளை தொடர்பாக நிறுவனத்திற்குக் கிடைக்கப் பெற்ற இடத்தில் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடு 2014 ஆம் ஆண்டினுள் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 2013 "தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பிரதானமாக கிழக்கு மாகாணத்தின் மக்களை விழிப்புணர்வூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தல்.

- நிறுவனத்தின் சேவைகளின் தரத்தினை உயரத்துவதற்கு SLIDA ஊடாக நடாத்தப்பட்டு வருகின்ற பட்ட மேற்படிப்பு டிப்ளோமாப் பாடநெறிக்கு எமது நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினை பங்குபற்றச் செய்வித்தல்/ஒரு நாள் வேலைத்திட்டம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை அனுப்புதல்.

- நிறுவனத்தின் ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாட்டிளை முன்னெடுத்தல்.

- நிறுவனத்திற் காணப்படும் இட வசதிகளை உச்சப் பயன்பாட்டிற்கு எடுத்து பயனாளிகளுக்கு வாகனத் தரிப்பட வசதிகளைச் செய்து கொடுத்தல், பிரத்தியேக நிறுவனத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் இட வசதிகளைச் செய்து கொடுத்தல் கடந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன. அதனூடாக நிறுவனத்தின் மேலதிக வருமானங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- மிகவும் தரமான நிலைமையினைக் கொண்ட முழுமையான எக்ஸ்றே அறிக்கையொன்றை சேவை நாடியினர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா. 59 இலட்சம் செலவு செய்யப்பட்டு RADSPEED – M UD 150 L – 40 E என்ற புதிய எக்ஸ்றே இயந்திரமொன்று நிறுவனத்திற் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4.5 நிறுவனத்தின் வருமானங்கள், செலவினங்கள் நிலை.

| அலுவலகங்கள் | வருமானம் (ரூபா) | செலவு (ரூபா) | நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| நுகெகொடை மற்றும் வேரகர | 114,763,691.81 | 111,865,973.85 | 2,897,717.96 |
| கண்டி | 27,813,637.87 | 13,578,626.26 | 14,235,011.61 |
| காலி | 13,474,035.51 | 8,198,498.72 | 5,288,459.79 |
| குருனாகல் | 32,549,857.12 | 10,754,918.05 | 21,794,939.07 |
| அனுராதபுரம் | 16,237,581.82 | 6,177,970.11 | 10,059,611.71 |
| கம்பாந்தோட்டை | 11,515,642.25 | 6,139,890.18 | 5,375,752.07 |
| இரத்தினபுரி | 12,891,963.02 | 5,949,569.89 | 69,423,393.13 |
| பதுளை | 9,530,777.81 | 5,893,182.18 | 3,637,595.63 |
| மொனராகலை | 5,055,015.84 | 3,294,173.73 | 1,760,842.11 |
| மட்டக்களப்பு | 8,079,429.49 | 3,827,251.59 | 4,252,177.90 |
| அம்பாறை | 6,927,077.55 | 4,826,522.23 | 2,100,555.32 |
| வவுனியா/கிளிநொச்சி | 7,920,260.10 | 5,479,470.73 | 2,440,789.37 |
| மன்னார் | 1,267,900.00 | 1,865,541.00 | -597,641.00 |
| மாத்தறை | 10,030,326.82 | 6,234,194.80 | 3,796,132.02 |
| திருகோணமலை | 5,513,513.19 | 3,019,726.47 | 2,493,786.72 |
| யாழ்ப்பாணம் | 6,904,290.31 | 4,113,968.10 | 2,790,322.21 |
| கம்பகா | 28,972,433.82 | 10,327,507.39 | 18,644,926.43 |
| களுத்துறை | 8,765,575.00 | 4,968,125.15 | 3,797,449.85 |
| மாத்தளை | 749,487.96 | 966,178.11 | -2,416,690.15 |
| **மொத்தம்** | **328,962,497.29** | **217,481,288.54** | **111,481,208.75** |

# 5. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு

## 5.1 அறிமுகம்

இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேரூந்துக்களை குறைந்த செலவில், உயர்ந்த தரத்தின் கீழ் பழுதுபார்த்து பொதுமக்கள் சேவைக்கு ஒன்றிணைத்தல்.

**தொலைநோக்கு**

"இலங்கை வாழ் மக்களுக்கு மிகவும் சுண்டியிழுக்கக்கூடிய கவர்ச்சியான போக்குவரத்துச் சேவையொன்றுக்குப் பங்களிப்பு நல்குதல்".

**பணி**

"இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் பிரத்தியேகப் பேரூந்து உரிமையாளர்களின் பழுதாகின்ற பிரயாணிகள் பேரூந்துக்களை குறைந்த கட்டணத்தில் உயர் தரத்தில் பழுதுபார்த்து சேவைக்கு ஒன்றிணைத்தல்".

## 5.2 2013 ஆம் ஆண்டில் நிறுவனம் பெற்றுக்கொண்ட முன்னேற்றம் (பௌதிகம் மற்றும் நிதிசார்)

| மாதம் | பேரூந்துக்களின் எண்ணிக்கை | இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கிடைத்த பணம் ரூ.மி. | உற்பத்திச் செலவு ரூ.மி. | நிறுவனத்திற்கு கிடைத்த இலாபம் ரூ.மி. |
|---|---|---|---|---|
| ஜனவரி | - | - | - | - |
| பெப்ரவரி | 02 | 0.40 | 0.31 | 0.09 |
| மார்ச் | 06 | 3.715 | 3.032 | 0.683 |
| ஏப்ரல் | 04 | 1.642 | 1.324 | 0.318 |
| மே | 06 | 2.824 | 2.287 | 0.537 |
| யூன் | 08 | 3.995 | 3.242 | 0.753 |
| யூலை | 04 | 1.637 | 1.324 | 0.313 |
| ஆகஸ்டு | 05 | 3.532 | 2.883 | 0.649 |
| செப்ரெம்பர் | 04 | 1.708 | 1.405 | 0.303 |
| ஒக்டோபர் | 02 | 1.533 | 1.246 | 0.287 |
| நவம்பர் | 07 | 4.040 | 3.286 | 0.754 |
| திசம்பர் | 04 | 2.114 | 1.713 | 0.400 |
| **மொத்தம்** | **52** | **27.140** | **22.052** | **5.087** |

## 5.3 உட்கட்டமைப்பு வசதிகள்

24 ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட லக்திவ பொறியியலாளர் அமைப்பு பிரதேசத்தில் பரந்து காணப்படும் தொழிற்சாலைகள் பல. இலங்கை போக்குவரத்துச் சபைக்குக் கடந்த காலங்களில் அனைத்துப் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் (என்ஜின் தவிர்ந்த) இதனூடாகவே இடம்பெற்றுள்ளன.

## 5.4 விளைதிறன் நிகழ்ச்சித் திட்டங்கள்

அனைத்து ஊழியர்களுக்குமான போக்குவரத்து வசதிகளை வழங்கி குறிப்பிட்ட நேரத்திற்கு ஊழியர்களை நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லல். இதற்கு 02 பேரூந்துக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.